விலை சதம் 50 ★ (பக்கங்கள் — 10

# ஈழநாடு
## வார மலர்

THE EELANADU VARAMALAR

சகலவித பல் வியாதிகளையும்
போக்கவல்லது
அண்ணா பற்பொடி
இலங்கையின்
எப்பாகத்திலும் கிடைக்கும்.
கூடுதலாக அண்ணா
பற்பொடியை வாங்கும்
வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி: 7412

மில்க்வைற்
அப்பியாசக் கொப்பி
100 மில்க்வைற் நீல
சோப் அல்லது 25 மில்க்
வைற் பார்சோப் அல்லது
10 மில்க்வைற் ஒரு இரு.
பெட்டி சலவைப்பவுடர்
மேலுறைகளை அனுப்பி மேற்
படி அப்பியாசக்கொப்பியை
பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

...Y OF SRI LANKA - JA... RECEIVED ...9-3-...5 PERIODICALS DIVISION ★ LIBRARY ★ ...MPUS

மலர் 21 | மாசி 20 | ரபி. ஆகி 4 | ஞாயிற்றுக்கிழமை | (4—3—79) | இதழ் 22

★ லாங்சொன் நகர் சீனர்கள் வசம்

★ ரஷ்யா மீண்டும் சீனாவுக்குஎச்சரிக்கை

★ போர்முனைக்கு9 ஆயிரம் வியட்நாம் படைகள்

# சீனபிரதேசத்திற்குள்வியட்நாம் படைகள் ஊடுருவி தாக்குதல்!

## யுத்தநிறுத்தத்துக்குசீனா கொள்கையளவில்இணக்கம்

ஹனோய், மார்ச் 3

சீன-வியட்நாம் எல்லையியினூடே வியட்நாம் படைகள் சீனாவுக்குள் ஊடுருவியுள்ளதாகவும், ஒன்பதாயிரம் வியட்நாம்படைகள் போர் முனைக்கு விமான மார்க்கமாக அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஹனோயிலிருந்து கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் யுத்த நிறுத்தம் செய்வதற்கு சீனா கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளதாக பீக்கிங்கில் இருந்து கிடைத்தசெய்திகள் தெரிவிக்கின்றன.

## இராணுவக்கமிட்டி நியமனம்

யுத்த நிறுத்தம் செய்வதென சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய இராணுவ கமிட்டி தீர்மானித்துள்ள போதிலும் எப்போது போர் நிறுத்தம் செய்வதென்று இன்றும் அறிவிக்கப்படவில்லை என்று பீக்கிங்கிலுள்ள ஜப்பானிய செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

வியட்நாமின் முக்கியத்துவம் வாய்ந்த லாங்சொன் நகரத்தை சீனப்படைகள் கைப்பற்றிவிட்டதாகவும் சீனப்படைகள் மேலும் முன்னேறாமல் தடுத்து அங்கிருந்தே வாபஸ் பெற சீனா முடிவு செய்துள்ளதாகவும் ஜப்பானிய செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

லாங்சொன் நகரைச் சுற்றி வியட்நாம் படைகள் நிலை கொண்டுள்ளதாகவும் அங்கிருந்து கொண்டு பீரங்கித் தாக்குதலை நடாத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## லாங்சொன். சீனா வசம்

வியட்நாமுக்குப் பாடம் கற்பிக்கும் நடவடிக்கை அதிக நாள் நீடிக்காது என்றும் சீனப்படைகள் விரைவில் வாபஸ் பெறப்பட்டுவிடும் மென்றும் சீன உதவிப் பிரதமர்களில் ஒருவர் தெரிவித்தார்.

## வியட்நாம் தூதுவர் 'அமிர்' தர்மருக்கு நன்றி

[கொழும்பு]

சீன-வியட்நாம் விவகாரம் குறித்து வியட்நாமுக்கு ஆதரவு தெரிவித்து இலங்கைப் பாராளுமன்றத்திலும் கொழும்பு நகரத்திலும் நடைபெற்ற கூட்டத்திலும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் ஆற்றிய உரைக்கு இலங்கையில் உள்ள வியட்நாம் தூதுவர் நன்றிதெரிவித்துள்ளார்.

வியட்நயம் தூதுவர் கொழும்பில்எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து நேரில் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

வியட்நாமுக்கு ஆதரவாக மானிப்பாய் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் பாராளுமன்றத்திலும் கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கமும் உரையாற்றியது தெரிந்ததே.

இவர்களது உரைகுறித்து செய்திகள் வியட்நாம் வானொலியில் ஒலிபரப்பப்பட்டதாகவும் வியட்நாம் தூதுவர் தெரிவித்தார். [ம-இ]

## மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரிலுள்ள தனியார் கல்வி நிலையமொன்றில் மாணவர்களுக்கும், கல்வி நிலைய நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக அக்கல்விநிலையத்தில்

(10-ம்பக்கம்பார்க்க)

## ரஷ்யா மீண்டும் எச்சரிக்கை

இதேசமயம் வியட்நாமுக்குள்ளிலிருந்து சீனா உடனடியாக படைகளை வெளியேற்ற வேண்டுமென்று ரஷ்யா 2வது தடவையாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனப் படைகள் உடன் வாபஸ்பெறாத பட்சத்தில் சீனா பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டி ஏற்படும் என்றும் ரஷ்யா தனது எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

## சைக்கிளில் வந்த வாலிபர் கைவரிசை

## இளம் ஆசிரியையின் சங்கிலி அபேஸ்

[கோண்டாவில்]

பாடசாலை ஆசிரியை ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலி ஒன்றை பட்டப்பகலிலே வழிப்பறிசெய்தசம்பவம்ஒன்று கந்தர்மடத்தில் நேற்று முன்தினம்மாலை நடைபெற்றது.

யாழ் இந்து தமிழ்கலவன் பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் செல்வி பத்மாவதி சுப்பிரமணியம் என்பவர் யாழ்.பொலிஸில்இது பற்றி முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவதினம் தான் பாடசாலைவிட்டு வீட்டிற்கு வரும் பொழுது பின்னால் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் தனது கழுத்திலிருந்த 300 ரூபாபெறுமதியான தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக அவர் புகார் செய்துள்ளார்.

இதுதொடர்பான புலன் விசாரணையில் குற்றத்தடுப்புப் பகுதி பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மாணிக்கவாசகர், எஸ் குணரெத்தினம், எஸ். ஜோஜ் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

## கூட்டணியின் அங்கமாக இளைஞர்பேரவை இயங்கும்

### 'அமிர்' கூட்டிய மகாநாட்டில் முடிவு

(யாழ்ப்பாணம்)

'தமிழ் இளைஞர் பேரவை தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் அங்கமாக இயங்குவதென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஆதரவு நல்கி பேரவைசெயல்படுமென்றும் ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பணியகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூட்டிய இளைஞர் பேரவையின் பொதுச் சபைக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவரும் நல்லூர் எம்.பியுமான திரு. மு. சிவசிதம்பரம் தலைமை வகித்தார். வடபகுதி கூட்டணி எம். பிக்களும், திருமலை, பட்டிருப்பு எம்.பிக்களும் கூட்டத்திற்கு வருகைதந்திருந்தனர்.

45 க்கு மேற்பட்ட பொதுச் சபை உறுப்பினர்களும். இளைஞர் பிரதிநிதிகளுமாக 112 உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்

மூதூர், கல்முனை பொத்துவில், புத்தளம் ஆகிய தொகுதிகளிலிருந்து எந்தப் பொதுச் சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை சந்ததியார் கோஷ்டியினரும் சலந்துகொள்ளவில்லை.

பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விபரம் வருமாறு;

### கூட்டணியில் நம்பிக்கை

இன்று கூடிய தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச் சபை உறுப்பினர்களும், ஏனைய இளைஞர் பிரதிநிதிகளுமாகிய நாம் தமிழர் விடுதலைக்கூட்டணியிலும் அதன் தலைமையிலும் முழு நம்பிக்கைகொண்டுள்ளோம் விடுதலைக் கூட்டணியின் தலைமையை ஏற்று கூட்டணியின் ஓர் அங்கமாக இயங்குவோம் என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி எடுக்கும் நடவடிக்கைக்கு முழுமையான ஆதரவு நல்கி செயல்படுவோமென்று இப்பொதுச் சபை தீர்மானிக்கிறது

இத்தீர்மானத்தை கொழும்புக் கிளையின் சார்பில் மண்டூர் மகேந்திரன் பிரேரிக்க, காங்கேசன்துறை கிளையின் சார்பில் நா கருணானந்தசிவம்

(10ம் பக்கம் பார்க்க)

# 'கிராம வளர்ச்சியில் கி. மு. கங்கத்தின் பங்கு''

[சங்கானை]

கிராம வளர்ச்சியில் முக்கிய பங்கை வகிப்பது கிராம முன்னேற்றச் சங்கங்களே சகல துறைகளிலும் மக்கள் பயன் பெறுவதற்கு எல்லோரும் ஏகோபித்த ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை எம் பி. திரு. தா. திருநாவுக்கரசு சங்கானை மல்லாகம் விதியில் கி. மு. சங்க கட்டிடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றுகையில் கூறினர்.

திரு. எஸ். கே. கணேஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு திருநாவுக்கரசு மேலும் பேசுகையில் கூறியதாவது கி மு சங்கத்திற்கு நிரந்தரக்கட்டிடம் தேவையானமையால் முன்னேடியாக இருபத்திஐயாயிரம் ரூபா பணம் ஒதுக்கியுள்ளேன். முற்ருக நிறைவேற்றுவதற்கு சுமார் 65 ஆயிரம் ரூபா தேவையாகையால் அதனைபன் முன்வைக்கப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இரண்டு மூன்று பகுதிகளாக ஏனைய வருடங்களில் பணம் ஒதுக்கீடு செய்து தருவேன்

திருவாளர்கள் வி சுப்பிரமணியம் என் கந்தசாமி மா செல்லக்கண்டு ஆகியோரும் பேசினர் [க]

## திருட்டு வழக்கு எதிரி சிகிச்சைக்கு அனுப்பட்டார்

[மாவிட்டபுரம்]

திருட்டுக்குற்றச்சாட்டின் பேரில் தம்முன் ஆஜர் செய்யப்பட்ட நபர் ஒருவர் மனநோயாளி போல் தோன்றவே அவரை அங்கொடை மனநோய் வைத்திய சாலையில் சிகிச்சைக்குட்படுத்துமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

வீமன்காமத்தைச்சேர்ந்தவரான என் பாலசிங்கம் என்பவர்மீது 25 தேங்காய்களையும் 40 ரூபா பெறுமதியான கல்லையும் திருடியதாக காங்கேசன் துறைப் பொலிசாரால்தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

விளக்கமறியலிலிருந்து சிறைச்சாலைக்காவலர்களால் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட இந்த எதிரி ஓர் மனநோயாளி போல் நடந்து கொண்டதால் நீதிபதி. திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி இவரை அங்கொடை மனநோய்வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்து மீண்டும் அடுத்த மாதம் 5ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டாா.

காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. தியாகராசா வழக்கை நடத்தினர். (க)

## குடைச்சாமியார்

முழங்காலுக்கு மேல் ஒரு வேட்டித்துண்டும் தோளில் ஒரு சால்வைத்துண்டும், கையில் ஒரு குடையும் கொண்டு நமது யாழ்ப்பாண மண்ணில் கால் நடையாகத் திரிந்து அருளொளி பரப்பிய குடைச்சாமியார் என அழைக்கப்படும் கோண்டாவில் கந்தையாச்சாமியார் மகாசமாதி யடைந்து இன்று (4-3-79) ஓராண்டு நிறைவுறுகிறது.

கோண்டாவில் நாகேந்திரர்-ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாக 1897-ல் அவதரித்த சுவாமியார் இளமையிலேயே பல்துறைகளையும் கற்றுத் தேர்ந்தார். இல்லறமெனும் நல்லறத்தில் புகுந்த அவர் தமது மனையாளின் மறைவையடுத்து ஆண்டவனே தஞ்சமென வாழப் புறப்பட்டார்.

ஒரே நேரத்தில் பல தோற்றம் கொண்டு பல்வேறு இடங்களில் காணப்படும் குடைச்சாமியார் பல அற்புதத் திருவிளையாடல்களையும் செய்துள்ளார். தமது அருளால் சகலரையும் கவர்ந்த சுவாமியாரின் அருளுக்காக ஏங்கியவர்கள் பலர் பலர் அவரது அருள் பெற்று பெரும் பாக்கியங்களைப் பெற்றுள்ளனர். கடையிற்சுவாமிகள், செல்லப்பாசுவாமிகள், யோகர் சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பலசுவாமிகள், கின்னத்தம்பிசுவாமிகள், யாழ்ப்பாணத்துச் சுவாமிகள், மகாதேவாசுவாமிகள் போன்றவர்கள் நமது மண்ணில் வாழ்ந்து நமக்கு அருளொளி காட்டிய வழியில் கந்தையாச் சுவாமியாரும் வாழ்ந்து வழிகாட்டினர். அவரைப் பின்பற்றும் சீடர்கள் அவ்வழி நடந்து அவர் புகழைப்பெருக்க வழிவகுக்கவேண்டியதவசியம்.

வ. குமாரசாமி
காங்கேசன் துறை.

## தவக்கால நற்சிந்தனை

'உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முதற்பயனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு அப்போது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்' உன் ஆலைகளில் திராட்சை இரசம் புரண்டோடும்.'

[நீதி-3-9]

என்று வேதம் நமக்கு அறிவுரை பகர்கிறது. அப்படியிருந்தும் நாம் எதை எதையோ யார் யாரையோ துணையாகக் கருதி, கருத்தாக இருக்கவேண்டிய காலத்தை எல்லாம் கர்த்தரின் தூய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டிய நேரத்தை எல்லாம் பாலைவனத்தில் ஒளி செய்யும் பால் நிலவைப் போல, நம் வாழ்வையெல்லாம் பாழ்படுத்திக்கொள்கிறோம். அப்படிப்பட்ட நல்ல துணையை நினைத்துப் பார்க்கிறோமா? என்றும் அழியாது நிலைத்து நிற்கும் நித்திய வாழ்வை எய்திநிற்கும் அழியாத ஆன்மாவை ஆண்டவரிடம் ஒப்படைக்கவேண்டாமா?

தொகுப்பு: வில்பிறெட்

## வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடம் உண்டு. விண்ணப்பதாரர்கள் தமது தகுதி, வயது, அனுபவம் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுத்துமூலமாக, 'அதிபர். புறே மோட்டர்ஸ் என்ஜினியறிங் கொம்பனி லிமிட், 844, பருத்தித்துறை வீதி, நல்லூர்'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் விண்ணப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

பதவிகள்:

1. J. T. O தகுதிபெற்ற பொறியியலாளர் (JTO Qualified Engineer Electrical/Mechanical- 2 Positions)
2. ஆமெச்சர் வைன்டிங் அன் மின்மோட்டர் வைன்டர்ஸ் (Armature & Motor Re-winders)
3. மின்னியல் ஒட்டுபவர் (Electrical welders) 10 வருட அனுபவம் உள்ளவர் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
4. கொல்லர் [Black smith] குறைந்தது 5 வருட அனுபவம் இருக்கவேண்டும்.
5. காவலாளர்கள்-2 [Security Guards) (முப்படைகளிலிருந்து இளைப்பாறியவர்களுக்கும், பாதுகாப்புச்சேவையில் கடமையாற்றியவர்க்கும் முன்னுரிமை அளிக்கப்படும்)

வயதெல்லை கிடையாது.

புறேமோட்டர்ஸ்
என்ஜினியறிங்
கம்பனி லிமிட்.
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199, தந்தி: வைரம்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

H.M.T. லேத் மொடல் L.B. 20 விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். வி செல்வநாதன். முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. 1812

நல்லநிலையிலுள்ள 5ஸ்ரீ 9000 சீரிஸ்லம் பிறட்டா [Lambretta] 75 C. C விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. 46, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 1813

சுன்னுகம் மாசியப்பிட்டி வீதியில் அரசடிக்கு அண்மையில், 46 இளம் தென்னங்கன்றுகளும், சிணறும், அருகாமையில் புறம்பான ஒழுங்கையுங்கொண்ட வீடுகட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு, தொடர்பு: வ. சோமசுந்தரம், இளைப்பாறிய ஓவசியர், கந்தரோடை. 1795

EY 5450 சோமசெற் கார் நல்ல நிலைமையில் உள்ளது. விரும்புவோர் செ. நிமலன், 10, சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். 1818

## தேவை

அனுபவமுள்ள கார் சாரதி உடனடியாக தேவை. தொடர்புகொள்ளவும். சபாரட்ணம், மெர்கண்டையில் கிறடிட் லிமிட்டட். 11/8, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 1809

இரும்புக் கடைக்கு மூலதனமிடக்கூடிய பங்குதாரர்கள் தேவை. 8-3-1979க்கு பின்பு நேரில் விண்ணப்பிக்கவும். ஜெட்ஷன் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ், 236, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1817

## விளம்பரம்

### வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 4000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனையாகவிருக்கின்றன. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/-செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் மூத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 9-3-79 வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு முன்னதாகச் சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா 500/-ஆகும்'

இங்ஙனம்,
பொது முகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூட்டுறவுச்சங்கம். 1815

## அறப்போராட்ட பயிற்சிவகுப்பு

(கொக்குவில்)

தந்தை செல்வா அறங்காவற்குழுவின் அறப்போராட்டம் அறவாழ்வு பற்றிய பயிற்சி கைதடி சைவஅனாதை இல்லத்தில் இன்று காலை முதல் மாலை வரை நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்பில் சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த 59 க்கு மேற்பட்ட இளைஞர்கள் பங்கு பற்றுவா

தந்தை செல்வா அறங்காவல் குழுத்தலைவர் திரு நேசையா செயலாளர் திரு சச்சிதானந்தன் சாவகச்சேரி எம். பி திரு வி. என் நவரத்தினம் கோப்பாய் எம். பி சி. கதிரவேலுப்பிள்ளை வி சு. துரைராசா ஆகியோரால் இப்பயிற்சி நடாத்தப்படும்

## விற்பனைக்கு

8 ஸ்ரீ 6007 மொறிஸ் மைனர் உன்னத நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: 53, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1805

## பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டிடவேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது. National Institutes 57, பாஷி சேரல் வீதி, யாழ்ப்பாணம், 1792

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில்நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாஷி சோல் வீதி யாழ்ப்பாணம். 1791

## PANEL OF LAWYERS

Applications are invited from Attorneys -at - Law for selection to the Panel of Lawyers to appear on behalf of the Northern Region Transport Board within the Judicial Divisions of the Northern Province in respect of the following:

1. D. C., M. C. Cases.
2. L. T. Cases.
3. Inquest-Fatal Accidents.

Please apply within two weeks from the date of this Advertisement, stating the Judicial Divisions Experience and Date of Enrolment and terms.

Personnel Manager,
N R.T.B,
165, 4th Cross Street,
Jaffna.

Ist March, 1979. 1796

## கேள்வி விளம்பரம்

மானிப்பாய் பட்டினசபை விசேட ஆணையாளரால் இச்சபையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கீழ்க்காணும் வேலைகட்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1979-03-23 ந்திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 50/- கேள்விக் கட்டுப்பணமாகவும் பத்திரக்கிரயமாக ரூபா 10 - 00ம் செலுத்தி 1979-03-21ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை இச்சபைக் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

### வேலைகள்

1. வில்லியம் மேதர் ஒழுங்கை திருத்தவேலை,
2. ஆஸ்பத்திரி முன்பக்க வீதி திருத்தவேலை.
3. செக்கலை ஒழுங்கை திருத்த வேலை.
4. அரசடிப் பிள்ளையார் கோவில் வீதி திருத்தவேலை.

பி. ஜே. பாலேந்திரா,
விசேட ஆணையாளர்
மானிப்பாய் பட்டினம்.
பட்டினசபை அலுவலகம்,
மானிப்பாய்,
1-3-79. 1816

# வழிபாடு

'ஆனந்தி'

அறைக்குள் நீண்டநேரம் தனிமையில் உட்கார்ந்திருந்து மனம் சலித்துப்போய் அவன் பொழுதைக் கழிப்பதற்காக ஜன்னல் ஒதுக்குப்புறத்தில் போய் நின்றுகொண்டிருந்தான். வெளியே வானம் மந்தகாசித்துக் கொண்டிருப்பதையும் பூரணமாகப் பாய்ந்து வரும் நிலா வெளிச்சம் தன் முகத்தில் பளீரென்று அடிப்பதையும் உணர்ந்து அவன் சிறிது நேரம் தன்னை மறந்து சந்தோஷித்தான். பிறகு ஏதோ ஓர் உள் உறுத்தலில் மனம் தெளிவடைந்து அறிவியல் ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் தனக்குள் நிறையச் சிந்தனைஞானம் பண்ணிக்கொண்டு அந்த நிலவைப் பார்க்கப் பிடிக்காமல்-அவன் கட்டிலுக்குத் திரும்பும்போது யாரோ அவசரமாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வருகிறமாதிரித் தெரிந்தது.

இருட்டடித்த முகத்தோடு கண்களில் 'உக்கிரமடைந்து, எதிரே வந்து நிற்கிற மூர்த்தியண்ணைவைப் பார்க்க அவனுக்குப் பாவமாக இருந்தது. நிலைமையைச் சமாளிப்பதற்காக அவன்,

'கதவு திறந்ததும் நான் சரசாவோவெண்டு நினைச்சன் காரியபூர்வமாக உங்கடை வருகையில் ஏதோ ஒரு முக்கியம் இருக்கிறதாக எனக்குப் படுகிறதண்ணை' என்று சொல்லிவிட்டு இயல்பு மாறாமல் மெல்லச் சிரித்தான்.

'நீ சிரிக்கிறாய். உன்மீது இரக்கம் காட்டுவதே பாவம். உனக்கு அண்ணனென்ற முறையில் உன்னை அதர்மங்களிலிருந்து பாதுகாக்க எனக்கு உரிமையிருக்கெண்டு நான் நினைக்கிறன். அப்படி நினைக்கப்போய்த்தான் இப்படி நான் கோபப்படுகிறன். நாங்கள் நல்லாய் ஏமார்ந்து போனோம். இதிலை முழுசாய் பாதிப்படைஞ்சிருக்கிற நீயோ சாதாரணமாய் நின்றுகொண்டிருக்கிறது. வேடிக்கையாயிருக்கு நீ என்னடா மனிசன்!

'அண்ணை இருட்டைப் பார்த்து நீங்கள் கோபிக்கிறது நியாயம். அதுக்கு உங்களுக்கு உரிமைகூட இருக்கு வெளிச்சம்மட்டுமே உலகத்திலை இருக்கவேணுமெண்டு நீங்களெல்லாம் ஒரு கட்சியிலை நின்று உழைக்கிறது எனக்குச் சரியாகப் படேலை. தான் என்ரை சிந்தனைகளுக்கு ஏற்ற மாதிரியே உலகத்தோடு பழகுகிறவன். இந்த வழிபாடு உங்களுக்குப் பொருந்தாமலே போகலாம். சற்று முன் நான் நிலா வெளிச்சத்தைப் பார்த்திட்டுத்தான் வந்தேன். அதுக்காக நான் இருட்டை வெறுக்கிறது என்ன நியாயம். இரண்டையும் சமமாய் பார்க்கிறதுக்கு இயல்பாகவே நான் பழகிக்கொண்டேன். உலக நியாயங்களுக்குப் பயந்து என்ரை அன்பு பலத்தையோ, ஆத்மீக சம்பத்துக்களையோ, குறைச்சுக்கொள்ள நான் விரும்புறேலை.

'அதுக்காக உன்னையே ஏமாத்தினவளை நீ தலையிலை வைத்துச் சுமக்கப்போறியோ?

'அண்ணை! கல்யாணம் எப்படியோ நடந்துபோச்சு. அவளை ஏற்றுக்கொள்ளுறதும், விடுறதும் என்ரை சொந்த விடயம். நான் இதிலை தனியாய் யோசிப்பன். நீங்கள் உங்கடை அபத்தமான யோசனை முடிவுகளை என் மீது சுமத்தாதேங்கோ? ப்ளீஸ்: போய் விடுங்கோ?

'நான் போறனடா! எண்டாலும் அவன்கள் செய்தது-உன்னை ஏமாத்தினது எல்லாம் பெரிய பிழை. இதுக்குக் கடவுள் வழியாகவேனும் தண்டனை கிடையாமல் போகாது. நான் வாறன்.

அவர் போனபின். சிறிது நேரம் கழித்து அவளைத் தேடிக்கொண்டு அவன் வாசலுக்குப் போனான். அதற்குள் அவள் வந்துவிட்டாள். அவன் உள்ளே திரும்பி வந்து, கட்டிலில் ஏறி அமர்ந்துகொண்டு கம்பீரம் குலையாமல் நிலவைப் பார்க்கும் வழிபாட்டு உணர்ச்சியோடு அவள் வருவதை மனம் விரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பார்வை குளிர்ச்சியாகத்தன் மீது படர்வதை உணர்ந்து-வெட்கம் மேலிட எனினும் அவனை நம்பமுடியாமல்தான் காண்பது ஒருவேளை கனவாகக்கூட இருக்கலாமோ என்று சந்தேகித்து கண்கலங்கி அழுகிற மெல்லிய சோகத்தோடு அவள் உள்ளே வந்தாள்

அப்போது அவள் கண்களில் தோற்றுவித்த அவநம்பிக்கையின் சாயல் வெளியிடு அவனுக்குப் புரிந்தமாதிரி இருந்தது. அவள் குற்றஉணர்வில் குலைந்து போயிருக்கிறாளென்று அவன் நினைத்தான் அக்குலைவை மாற்றி அவளை ஒரு முழு மனிதப்பிறவியாய், சந்தோஷிக்கச் செய்யவேண்டுமென்று அவன் மிகவும் பெருந்தனமையாய் ஆசைப்பட்டான்.

அவள் அவனோடு சேர்ந்து உட்காரக்கூடப் பயந்தவளாய், அந்த மங்களச்சூழ்நிலையோடு மனம் ஒட்டாமல் தூரத்தில் ஒதுங்கி வெறித்து அவள் அப்படி நிற்கிறது பொறுக்காமல், அவன் சொன்னான்.

'நிலவு தூரத்திலை நிண்டால் எப்படி? நான் வாழ்ந்தாற் போலத்தான்.'

அவள் கட்டில்சட்டத்தோடு நெருங்கிவந்து. நிலாவைப் பற்றி நிறையப் பேசத்தெரிந்த அவன் உலகத்துக்கே புதின மானவன் என்று நம்புகிறவள் மாதிரி, மலைப்புத்தட்டிப்போய், அவன் கண்களை ஆழம் பார்த்துக்கொண்டு வெட்கம் மாறாமல், அடித்தொண்டையிலிருந்து அவள் சொன்னாள்.

'நிலா எப்பவும் தூரத்திலை தானிருக்கும்'

'அது உன்ரை கண்ணுக்கு, நீ நினைச்சிருக்கிறமாதிரி-நான் நிலவுக்கு மட்டும் ஆசைப்படுகிற மனிசனில்லை. அப்படி நினைச்சுதான்... என்று உணர்ச்சிதடுமாறிப் பேசியவன்-பிறகு அதைச் சொல்லிவிட்ட குற்றத்துக்காக நாக்கைக் கடித்துக்கொண்டு-அசடு வழியச் சிரித்தான்.

அது அவளைச் சிலுவை அறைந்துவிட்டது-நெஞ்செல்லாம் சிலுவை ஏறிய உதிரப் பெருக்கோடு உணர்ச்சிவசப் பட்டு-மனம் நெகிழ்ந்துபோய்-கட்டிலுக்கு வந்து அவனை நெருங்கி அவள் அமர்ந்துகொண்டிருக்கின்றாள். நீண்ட நேரம் அவளுக்குப் பேசத்தோன்றாமல் அவன் கையைப் பிடித்துக்கொண்டு அவள் மௌனமாக அழுதாள் அது தங்களுடைய முதலிரவென்பதையே அவளால் நம்பமுடியவில்லை. அவள் அப்படி அழுது கொண்டிருக்கிறாள். அவள் அழுகை ஓய வெகு நேரம் பிடித்தது. கைக்குட்டையை எடுத்து அவள் கண்களைத் துடைத்தவாறே- அவன் கேட்டான்:

'இப்ப ஏன் இந்த அழுகை? நான்தான் ஒண்டும் சொல்லேலையே...'

'நீங்கள் சொல்லாமலிருக்கிறதுதான் எனக்குத் துக்கமாயிருக்கு, நீங்கள் ஏன் இப்படியிருக்கிறியள்? ஒரு மனிசன்ரை காலடியில் நாங்கள் மூட்டின பாவநெருப்பு ஏன் வேகேலை? நீங்கள் இப்படியெண்டால், நிஜமாகவே உங்கடை கண்ணுக்கு முன்னாலை வந்திருப்பன்.'

'ஏன் வரேலையெண்டு நானே சொல்லிவிடுறன். உலகம் நீங்களெல்லாம் எதிர்பார்க்கிறமாதிரித்தான் வாழுது. அதுக்கு வெளிச்சமெண்டால் ஆசை. இருளைக் கண்டால் பிடிக்காது. பாவம் என்ன செய்வாய் - வாழுற ஆசை ஆளைவிட்டது. நீ அழகில்லை. கறுப்பு...எண்டாலும் வாழுகிற ஆசை எல்லோரையும் போல உனக்கும் இருக்கத்தானே செய்யும் ஆனால் எப்படி வாழுறது? ஆர் உன்னைச் சுமக்க முன்வருவினம்? உன்னாலை ஒரு சந்தோஷமுமில்லையெண்டு மனிசன் நினைச்சால்...மனிசன் அப்படித்தான் நினைப்பான். அவனுக்குப் பலன் வேணும். பலனை எதிர்பாராமல்... எனக்கு நிலவு இருட்டு இரண்டும் வேணும் நான் மனிசன் தானென்று நம்பி நீயோ, உன்னைச் சார்ந்த மற்றவர்களோ செய்திருக்கிற பிழையை...பிழையெண்டு நீ நினைச்சால், நான் அதை மனப்பூர்வமாய் மன்னிக்கிறன் இப்ப எதுக்கு அந்தப் பழங்கதையெல்லாம்...

'சிலவேளைகளில எனக்கு அதைரியமாய் போய்விடுது. நாங்கள் நிலவைக் காட்டி உங்களை ஏமாத்தினமே! உங்களுக்கு அது மறந்திடுமே! எவ்வளவு அழகு அவள். நீங்கள் அவளோடு என்னவெல்லாம் கற்பனை பண்ணியிருப்பியள், மணவறையிலை நான் கொலைகாரன் மாதிரி இருந்தன். உங்களை நிமிர்ந்து பார்க்க எனக்கென்ன தகுதி' என்று அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

'அழாதேம்மா! நான் அப்படி வாழுறேலை. எதையும் ஆளுற புத்தியில்லை. நிலவு எண்டு நீ சொன்னியே. நான் இப்படி எத்தனை நிலவுகளைப் பார்த்திருப்பன்; கோரமான இருட்டுகளைச் சந்தித்திருப்பன். எல்லாம் எனக்கு வேணும். இருட்டைத்தான் நான் கூட விரும்புகிறன் ஏனெண்டால் அதுக்கு ஆள் குறைவு. வெளிச்சத்தை ஏங்க எத்தனைபேர். இருளுக்கு யார்...?

'ஓம்! அது உண்மைதான். நான் அடுக்கடுக்காய் சோதனைகளைச் சந்திச்சன் என்னை எத்தனை பேர் வந்து பெண் பார்த்துவிட்டுப் போனவை? அத்தனை பேரும் என்னை வேண்டாமெண்டு சொன்னவை நீங்கள் மட்டும்...'

'உன்னை உணர்ந்துகொண்டிருக்கிறேன். மனிசர்கள் இப்படிச் செய்தால் - பாவம் செய்கிறவர்கள் இப்படித்தான் பெருகுவினம். நீங்கள் வேறு என்ன செய்வீர்கள்? நான் எல்லாத்தையுமே மறந்திட்டேன். எனக்கு இப்ப வாழ்க்கைவேணும் அது நீயாகத்தானிருக்கமுடியும்.'

என்று அவன் நிலவு தெரியாமலிருப்பதற்கு விளக்கை அணைத்தான். அந்தக் கும்மிருட்டில் திடீரென்று அவளுக்கு உணர்ச்சி பதறிக் கண்கள் புல்லரித்து அவனின் காலடியைத் தடவிக் கண்களில் ஒற்றிக்கொண்டு அவள் வழிபாடு செய்கிறது...அவனுக்கு என்னவோபோலிருந்தது மிகவும் உணர்ச்சிகரமாய் அவளைத் தூக்கி நிறுத்தித் தன்மார்போடு சாய்த்துக்கொண்டு அவன் கேட்டான்:

'நீ என்ன, என்னை மகானெண்டு நினைச்சிட்டியோ?'

'நான் மனிசனெண்டு நினைச்சன். நீங்கள் ஏமாத்திப் போட்டியள் வீணாய் உங்கடை காலடியிலை வேகுதே பாவ நெருப்பு அது என்ரை எண்டு நினைக்கேக்கைதான், எவ்வளவோ மனவருத்தமாயிருக்கு'

'நீ கங்கையாயிருந்து அதை அணைத்துவிடலாம்' என்றான் அவன்.

'கங்கை இருட்டிலே கூடப் பாயமுடிகிறதா?' என்று தொடர்ந்து அவள் கேட்டுக்கொண்டிருக்கிறாள். அதற்கு ஒன்றும் சொல்ல முடியாமல் மௌனமாக அவன் சிரிப்பது இருட்டிலே அவளுக்கு எப்படித் தெரியப் போகிறது?

(பாவுங் கல்லே)



# தசாம்ச எண் சோதிடத்தில் உங்கள் வார பலன்

4-3-1979 முதல் 10-3-1979 வரையுமுள்ள காலபலன்.

இப்பலன்கள் பிறந்த தேதி எண்ணை (அதிர்ஷ்ட எண்) கொண்டே பார்க்கவேண்டியது. ஆண்டு, மாதம், திகதி மூன்றையும் கூட்டிய கூட்டெண்ணுக்கும் (விதி எண்) ஓரளவு பொருந்தும்; பெயர் எண், மற்றும் எண்களும் சரிவர அமையுமானால் இப்பலனும் கூடியவரை சரியானதாகவே இருக்கும்.

இவ்வாரத்திற்குரிய பூர்வ ஜென்மத் தொடர்பு எண் 4, விதி எண்-6, அதிர்ஷ்ட எண் 4, ஊழ் எண் 8, வினை எண் 3, நியதி எண் 1, நியம எண் 7, ஆக அமைகின்றது.

## எண் 1

தேதி: 1-10-19-28 ஆகியவற்றில் பிறந்தவர்களின் எண் ஒன்றாகும். இவர்களுக்கு இவ்வாரம் வாழ்க்கை நன்றாக அமைகிறது. தொழிலில் முன்னேற்றமுண்டு. கௌரவமும் புகழும் கிடைக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். இவ்வாரத்தில் இவர்கள் புதுத்தொழில்கள் தொடங்குவது நல்லதல்ல. செவ்வாய்க்கிழமை வீதி விபத்துக்கள், திருடர் பயம் ஏற்படக்கூடும், வாகன சாரதிகள் அன்றையதினம் மிகவும் அவதானமாக இருத்தல் நன்று

## எண் 2

தேதி: 2-11-20-29 ஆகியவற்றில் பிறந்தவர்களின் எண் இரண்டாகும். இவர்களுக்கு இந்த வாரம் தொழிலால் லாபமுண்டு. எதிர்ப்புக்கள் ஏற்படலாம், ஏற்பட்டாலும் சமாளித்துக்கொள்ளுவார்கள், உத்தியோகத்தர்களுக்குக் கடும் உழைப்பும் பொறுப்பும் கூடும். குடும்ப சுகம் பாதிக்கக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும், செவ்வாய்க்கிழமையை அவதானமாகக் கழிக்கவும்.

## எண் 3

தேதி: 3-12-21-30 ஆகியவற்றில் பிறந்தவர்களுக்கு எண் மூன்றாகும் இவர்களுக்கு ஆரோக்கியம் பாதிக்கக்கூடும், தொழில் தானத்திலும் சிக்கல்கள் செலவினங்கள் ஏற்படும் காதலர்களுக்குத் தடுமாற்றம் உண்டு பொறுமையினால் கஷ்டம் ஏற்படலாம். உணவு விஷயத்தில் மிதமான கவனம் வேண்டும். செவ்வாய்க்கிழமை மிகவும் துரதிர்ஷ்டதினம் சாரதிகளுக்குக்கூடிய அவதானம் வேண்டும்.

## எண் 4

தேதி: 4-13-22-31 ஆகியவற்றில் பிறந்தவர்களின் எண் நான்காகும். இவர்களுக்குத் தொழிலில் நன்மை, பொருள் லாபம் முன்பட்ட கடன் தீர்தல் மற்றவர்களின் பொருள் வந்துசேருதல், சயன போசன சுகம் இவையுண்டாம். குடும்பத்தில் தப்பபிப்பிராயங்கள் தோன்றக்கூடும். செவ்வாய்க்கிழமை அவதானம் வேண்டும்.

## எண் 5

தேதி: 5-14-23 ஆகியவற்றில் பிறந்தவர்களின் எண் ஐந்தாகும். இவர்களுக்கு ஒரு முன்னேற்றமான வாரமாகும். தொழில் பலிதம், போட்டிகளில் வெற்றி, கொடுக்கல் வாங்கல் சிறப்பு நண்பர்கள் தாங்களாகவே வந்து உதவுவதா இவையுண்டாகும் எனினும் குடும்ப சுகம் பாதிப்புக்கு இடமுண்டாகலாம்

## எண் 6

தேதி: 6-15-24 ஆகியவற்றில் பிறந்தவர்களின் எண் ஆறாகும். இவர்களுக்கு பூமி சம்பந்தமான சந்தோஷம், காதல் வெற்றி புதிய நண்பர்களால் நன்மை தெய்வ வழிபாடு, குடும்ப மகிழ்ச்சி பெரியோர் மதிப்பு இவையுண்டாம் திங்கட்கிழமை அவதானமாக நடந்துகொள்ளவும்.

## எண் 7

தேதி: 7-16-25 ஆகியவற்றில் பிறந்தவர்களின் எண் ஏழாகும். இவர்களுக்குத் தனதானிய லாபம், பொருள் வரவு, குடும்ப சுகம், காதலர்களுக்குச் சந்தோஷம், இவை உண்டானாலும், குடும்ப வாழ்வில் பிறரால் கஷ்டம், உடல் நலக்குறைவு, வயிற்றுக் கோளாறு முதலான ரோகங்கள் உண்டாகலாம். திங்கள், புதன்கிழமைகளில் அவதானம் வேண்டும்.

## எண் 8

தேதி: 8-17-26 ஆகியவற்றில் பிறந்தவர்களின் எண் எட்டாகும். இவர்களுக்கு யோசனை கூடுதலாக இருக்கும் தொழிலில் பிரயாசம் கூடுதலாயிருக்கும். வரவுக்கு மிஞ்சின செலவுண்டாகும். உடல் நலம் சிறிது பாதிப்படையலாம். வாகன விபத்துக்கள் ஏற்படலாம். குடும்ப அன்புக்கு இடமுண்டு. வியாழக்கிழமை மிகவும் துரதிர்ஷ்டமான வாரம், வாகன விபத்துக்கள் நேரலாம், கூடிய கவனமெடுக்கவும்.

## எண் 9

தேதி: 9-18-27 ஆகியவற்றில் பிறந்தவர்களின் எண் ஒன்பதாகும். இவர்களுக்கு தொழில் முன்னேற்றம் இருப்பினும் கல்வியுடன் சம்பந்தப்பட்ட தொழில் புரிவோர் கவலையடைய நேரிடும் சிறு சிறு விரோதங்கள் ஏற்படக்கூடும். மன அமைதி பாதிப்படையும் வழக்கு விவகாரங்களும் ஏற்படக்கூடும் மற்றவர்களுடன் பொறுமையைக் கைக்கொள்ளுதல் நன்று. வெள்ளிக்கிழமை மிகவும் அவதானம் வேண்டும்.

'வரசி'

சி. அ. செல்வத்துரை,
கூளாவடி,
அனைக்கோட்டை.

## இலக்கியத்துறையில் இளையதலைமுறை - 7

# சுயநலத்துக்காக எழுத்தை ஈடு வைக்கலாமா?

இலந்தவெல ஒரு மலை முகடு குளிருக்குமட்டும் பஞ்சமில்லாத ஓர் இடம்; 'கிடுகிடு' என்று உடலை நடுங்க வைக்கும் குளிரிலே முழங்கால் தலையைத் தொடும்படி குறண்டிக்கொண்டு கிடக்கும் அவர் விடியற்காலையிலேயே எழும்புகின்றார். வீட்டிலே அவரைத்தவிர இருப்பது இன்னும் ஒரே ஜீவன்-தாய். இருமிக்கொண்டே படுத்துக்கிடக்கிறார்.

அந்தக் குளிரிலும் போர்வையை விலக்கிக்கொண்டு எழுவதற்கு எவ்வளவு துணிச்சல். துணியாமலும் இருக்க முடியுமா? சமையலறைக்குள் அவரே அலைபாய்கிறார். சமைத்துமுடியும்போது மலைமகளைப் போர்த்தியிருந்தபனிப் படலம் மெல்லக்கலைகிறது. பாடசாலையை நோக்கி நடக்கிறார். பாடசாலை என்றால்— எத்தனை வகுப்புக்கள் இருந்தாலும் எத்தனை மாணவர்கள் வந்தாலும் அவர் ஒருவர்தான் ஆசிரியர் அது ஒரு தோட்டப் பாடசாலை. அந்தச் சமூகத்தை நாளை விடியவைக்க வேண்டி சிறுவர்கள் அவரது கரங்களில் ... வகுப்பு முடிந்ததும் வீட்டுக்கு வருகிறார் மீண்டும் சமையல்வேலை, அன்னைக்கான வழக்கமான கடமைகள். இரவும் உறங்கத்தொடங்கிவிட்டது. அதோ அவர் முழங்காலை தலையுடன்தொடும்படி குறண்டிக்கொண்டு படுத்துவிட்டார்.

ஆசிரியர் பாக்கியசாமியின் வாழ்க்கையில் ஒருநாள் இது.

ஆனால் பரிபூரணனின் வாழ்க்கை இவற்றோடு முடியவில்லை. பல திசைகளிலும் தன் சிந்தனையை விரித்து அனுபவத்தேடல்களில் அசலான பல சிறுகதைகளையும் கவிதைகளையும் விளைவித்திருக்கிறது.

ரேம் ஆறு அழகாக வளைந்து நெளிந்து புதுக்கன்னியாக ஓடி வருகிறது. அப்பப்பா அவனுக்குத்தான் எத்துணை உணர்ச்சி வேகம் என்று அவரது கவித்துவ உள்ளம் இன்பத்தை மட்டும் அனுபவிக்கவில்லை. ஓடிவரும் நீரைத்தேக்கி துரையினுடைய நீச்சல் தொட்டியில் அவரது நண்பர்கள் குளித்து விளையாடுவதும், மறுபுறம் குடிக்கக்கூட நீரில்லாமல் தனது சமூகத்தவர்கள் அல்லாடுவதும் அவரைக் கொதிக்கவைக்கிறது- கனலாகச் சீறுகிறது. அவரது ரேம் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது- சிறுகதை. நீச்சல் தொட்டியில் உள்ள நீரால்கூட அணைக்க முடியாத கனல் இது.

தோட்ட வாழ்க்கையில் தான்காணும் அநீதிகளை- வார்த்தைகளையே சாட்டையாகக்கொண்டு சாடும் இவரது கதைகளைத் தவறுது படித்தநான் இவரதுதோற்றம் இப்படித்தான் இருக்குமென்று எதிர்பார்க்கவில்லை- கதைகளிலே இருந்த பலம் இவரது உடலிலே இல்லை- கருத்துக்களிலே இருக்கும் வேகம் செயலிலே இல்லை- மிகவும் அமைதியானவர். மெலிந்த உடல்- மெல்லிய குரல்.பொறுமை... பொறுமை, கனம்கூடிய ஆழத்தின் அமைதியோ என்னவோ?

பத்திரிகைகள் எதை விரும்புகின்றன- எப்படி எழுதினால் விரும்புவார்கள்- பிரசுரிப்பார்கள் என்றெல்லாம் கவனித்துக்கொண்டிருக்காமல் சமூகத்தைக் கவனித்தே எழுத வேண்டும்- சுயநலத்துக்காக எழுத்தாளர்கள் தமது எழுத்தை ஈடுவைக்கலாமா? என்று கவலையோடு கேட்கிறார் அவர்- அரசியல் வாதிகள் அரசியல் இலாபங்களையே நோக்கமாகக்கொண்டிருப்பார்கள்- சொகுசு வாழ்க்கை வாழும் அவர்களைவிட மக்களோடுமக்களாகவாழ்ந்து இன்பதுன்பங்களில் பங்குகொள்ளும் எழுத்தாளர்கள்தான் மக்களின் பிரச்னைகளை நன்கு புரிந்தவர்கள் அவர்களின் கருத்துக்கள்தான் மக்களை வழிநடத்த வேண்டும் என்று உறுதியோடு கூறினர்.

மலையக மக்களோடுவாழ்ந்து பிரச்னைகளிலே பங்கேற்ற அவர் மலையகத்துப் பிரச்னைகளை ஆணித்தரமாக விளக்கிக் கூறிக்கொண்டேபோனபோது கோபம், கவலை, கண்ணீர் எல்லாமே மாறிமாறி முகத்தில் கோலமிட்டன அவரது சமூக நேசிப்பை- கூர்மையான சமூகப்பார்வையை தெளிவான சிந்தனைகளைக்கண்டு என்னுள் வியந்தேன்.

அவரது எழுத்திலே இல்லாத விரக்தி அவரிடம் மேலோங்குவதுபோல் ஒரு

'அவங்க பார்க்கலாம். உனக்கு முடியாது.'

'ஏன்?'

'நீ கூலியின் மகன்.'

'கூலியின் மகன் என்றால்...'

'கூலிதான். அவனுக்கு உத்தியோகமில்லை.'

கொதித்து எழுகிறான் மலையக இளைஞன். இது யார் விதித்த விதி? இதற்கு வழி பரிபூரணன் காட்டுகிறார் மலையக இளைஞர்கள் வெறும்மாயமானை நம்பாது... பழையதை

**காவலூர் எஸ். ஜெகநாதன்**

தோற்றம். சில நிமிடங்களிலேயே மாற்றம். இளையதலைமுறையினரில் பலர் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கே மாற்றங்கள் தெரிகின்றன. இலக்கிய விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டுவருகிறது இலக்கிய மன்றங்கள் அமைத்து இலக்கிய விழாக்கள் நடாத்தி மலையக இளைஞர்கள் இலக்கியத்துறையில் ஆர்வம்காட்டிவருகிறார்கள் என்று கூறித் திருப்திப்பட்டார்.

'உனக்கு உத்தியோகம் இல்லை' என்றது அதிகாரவர்க்கம்.

'நான் எஸ் எஸ் சி. பாஸ் பண்ணியிருக்கிறேன். பாஸ் பண்ணுதவங்க எல்லாம் உத்தியோகம் பார்க்கிறாங்க.'

நாடித்திரும்பாது ... கைத்தொழில் போன்ற புது முயற்சிகளிலே இறங்கவேண்டும். அப்போதுதான்ஒருபுதியசரித்திரம் உருவாகும். இதுதான் 'ஒரு சரித்திரம் உருவாகிறது' சிறுகதையின் சாராம்சம். இதுவே தான் அவரது கதைகளிலேயே அவருக்கு மிகவும் பிடித்த கதை.

1968-ம் ஆண்டளவில் எழுதத்தொடங்கிய பரிபூரணன் கிட்டத்தட்ட பதினைந்து கதைகள்தான் எழுதியுள்ளார். எழுதியது குறைவென்றாலும் அத்தனையும் முத்தானவை. தமிழகத்திலேஒரு மௌனி போன்று இவரும் ஏதோ ஒன்றிரண்டு தான் எழுதுவார். எழுதினால் எழுதினதுதான்.

ஈழத்து இலக்கியத்துறையில் ஒரு காலத்தில் வேகமாக எழுதியவர் தெளிவத்தை யோசப் அவர்கள். அவரது தம்பியார் தான் இந்தப் பரிபூரணன். அண்ணனின் பேனாவை இரவல் வாங்காமல் தன் சொந்தப் பேனாவால் சுயமாக எழுதி வருபவர் இவர். வீரகேசரி நடத்திய மலையக சிறுகதைப் போட்டியில் 'ஒன்றுக்குள் ஓராயிரம் போராட்டங்கள்' கதை முதற்பரிசைப்பெற்றது.

மலையக இலக்கிய முன்னோடிகளின் பாதைகளை நோக்கி தன் பயணத்தை வெகு கவனமாக நடத்துகிறார். மலையக எழுத்தாளர்களுக்கு பிரசுரகளம் குறைவு என்பதும் பத்திரிகைகள் மலைக்குரலுக்கென ஒதுக்கியபக்கங்களையும்ஒழித்துவிட்டன என்பதும் இவரது குறைகள். சிறுகதைகளைமட்டுமன்றி பத்து ரேடியோ நாடகங்களையும் எழுதியுள்ளார்.

வயதானபின்னும் திருமணம் பற்றிய நினைவேயில்லாமல் வயதான தாயாரைப் பேணிப் பாதுகாப்பதிலேயே கண்ணும் கருத்துமாக காலத்தை நகர்த்தும் பரிபூரணன் தாயன்புமிகையாக உள்ளவர். அன்னையின் அருளை வியந்து சில சிறுகதைகளை எழுதியுள்ளார்.

பரிபூரணன்ஒருதரமான கவிஞர், இருபத்தைந்துக்குமேற்பட்ட கவிதைகளே பிரசுரமாகியுள்ளபோதிலும்நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதி கட்டி வைத்திருக்கிறார்.

மலையக சமுதாயத்தின் வாழ்க்கை முறைகளை, வரலாற்றினை பல்கோணங்களி



பரிபூரணன்

லும் படம்பிடித்துக் காட்டுகின்றன, இவரது கவிதைகள். புதுக்கவிதையினையும் வரவேற்கின்ற இவர், மரபுக்கவிதைகளிலேயேஅதிக ஈடுபாடுகொண்டுள்ளார்.

பச்சைக் குழந்தை பசியால் துடிக்கிறது. மாவில்லை, சீனி இல்லை. பணம்படைத்தவர் விருந்திலே கேக்' ஆக குவிந்துகிடக்கின்றன, மாடாக உழைக்கும் ஏழைக்கு மா இல்லை-உழைக்காது உண்பவருக்கே கிடைக்கிறது- மானத்துக்கு அணிய ஆடையில்லை- ஆனால் மாளிகை யன்னலில் திரைச்சீலை இருக்கிறது- இது என்ன சமுதாய அமைப்பு, இதைமாற்றிட வேண்டாமா என்று துடிக்கிறார், அந்தத் துடிப்பு சமுதாய அமைப்பை மாற்றிடுவோம் என்ற புதிய உலகத்தில் வெளிவந்தகவிதை. பாரதியின் துடிப்பைப்போல் அல்லவா ஒலிக்கிறது.

பரிபூரணன் ஆற்றல்மிக்க எழுத்தாளர், அவரது ஆற்றல்கள் வேகமுள்ள ஆறுகபாய வேண்டும். வரண்டுகிடக்கும் சமூகத்தைச் செழுமைப்படுத்த வேண்டும்- மலையகத்திலே அவர்போன்றவர் நாளை ஆயிரமாயிரம் தோன்ற அவர்தான் வழிவகுக்கவேண்டும்.

# இலக்கிய இரசிகர்களின் இல்லங்களை அலங்கரிக்கவேண்டிய நூல்

ஈழத்து எழுத்தாளர் வரிசையில் முன்வைத்து எண்ணக்கூடியவரும், ஈழத்துச்சிறுகதை முன்னோடிகளில் ஒருவருமாகிய 'இலங்கையர்கோன்' என்றதிரு சிவஞானசுந்தரம் இவ்வுலகை நீத்துபதினேழுஆண்டுகள்பூர்த்தியாகின்றன, இவ்வேளையில் அவரதுசிறுகதைத்தொகுதியாகிய 'வெள்ளிப்பாதசரம்' இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது இலங்கையர்

> இலங்கையர்கோன்
> கதைகள்
> 'வெள்ளிப்பாதசரம்'
> இரண்டாம் பதிப்பு:
> 1978

கோன் வாழ்ந்த காலத்திலே பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகள் பல வாயினும்: இத்தொகுதியிலே அவரது பதினைந்து சிறுகதைகளே இடம்பெற்றுள்ளன. இத்தொகுதி பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்கும் மாணவர்களுக்குப் பாடப்புத்தகமாக இடம்பெற்றுள்ளது. அத்தேவை கருதி இரண்டாம் பதிப்பு வெளிவந்தமையால் வெளியீட்டாளர் இப்பதிப்பிலே முதலாம் பதிப்பிலுள்ள கதைகளை அப்படியே வெளியிட்டுள்ளார்கள்.

'இலங்கையர்கோன்' என்ற தனது புனைபெயருக்கேற்ப அவர், ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஓர் அரசனைப் போல முன்னோடியாக விளங்கினார். மிகச் சிறு வயதிலேயே எழுத்துலகுக்குக் காலடி எடுதது வைத்த இலங்கையர்கோன் கட்டுரை, கவிதைத்துறையிலும் கைவைத்தபோதும் சிறுகதையும், வானொலி நாடகமும் கொடுத்த வெற்றியை அவை கொடுக்கவில்லை எனலாம்.

பிறநாட்டுச் சிறுகதைகளையும் இந்தியச் சிறுகதைகளையும் படித்து இலங்கைச் சிறுகதைகள் எப்படி அமைய வேண்டுமெனத் தனக்குத் தானே ஒரு கோட்பாட்டை வகுத்துக்கொண்டார். இலங்கைமக்களைக்கதாபாத்திரங்களாகக் கொண்டு கதைகள் படைக்கவேண்டும் என்ற அவரது எண்ணம் அவரது கதைகளிலே நிறைவுபெறுகின்றது.

'வெள்ளிப்பாதசரம்' தொகுதியிலுள்ள சிறுகதைகளை வரலாற்றுக்கதைகள், இதிகாசக்கதைகள், சமூகக் கதைகள் என மூன்றாகப் பிரிக்க முடிகின்றது- அனுலா; சிகிரியா யாழ்ப்பாடி என்பன வரலாற்றுக் கதைகளாகவும்; மரியாமதலேனு, மேனகை, தாய் முதலியன இதிகாசக் கதைகளாகவும்; வெள்ளிப்பாதசரம், மூதற் சம்பளம், மச்சாள், தாழை நிழலிலே என்பன சமூகக் கதைகளாகவும் விளங்குகின்றன.

'இலங்கையர்கோனின் பாத்திரங்கள் உணர்ச்சியின் அடிமைகள்' என்பதற்கிணங்கச் சிறுகதைகளிற் பெரும்பாலும் மன உணர்ச்சிகளையும், சம்பவங்களையும் உரையாடல் மூலம் வளர்த்துச் செல்கின்றார். சிறுகதைகளுக்கு ஏற்றாற்போல நடையையும், சொற்பிரயோகத்தையும் மாற்றி கதைக்கு உயிரூட்டியுள்ளார். சமூகக் கதைகளிற் பேச்சுவழக்குத் தமிழைக் கையாண்டும், சரித்திரக் கதைகளில் இலக்கணத் தமிழைக் கையாண்டும் உள்ளமை சிறுகதைகளுக்குச் சிறப்பைக் கொடுக்கின்றது.

சமூகக் கதைகளிற் சிறந்தனவாக வெள்ளிப்பாதசரம், முதற் சம்பளம், சக்கரவாகம் என்பனவற்றைக் காணலாம். புதிதாக மணஞ்செய்த செல்லையா, தன் மனைவி நல்லம்மாவை அழைத்துக்கொண்டு வல்லிபுரக்கோவில் திருவிழாவிற்குச் செல்கின்றான். தன்னிடமிருந்த முப்பத்தொரு ரூபாயில் முப்பது ரூபாவுக்கு வெள்ளிப்பாதசரம் வாங்கி மனைவிக்குக் கொடுத்து, சிறிது நேரத்திற்குள்ளேயே அது தொலைந்துவிடவும் 'கொஞ்சம் கவனமாக வாறதுக்கென்ன? உனக்கு ஆட்டம் மெத்திப் போச்சு. ஊதாரிநாய்' என்று ஏசிவிடுகிறான். மனம்நொந்த நல்லம்மா உற்சாகமிழந்துவிடுகிறாள். ஆயினும் தாம்பத்திய உறவிலே இருவரும் மீண்டும் ஒன்றுகின்றனர். இக்கதையில் வரும் செல்லையாவும், நல்லம்மாவும் நாம் அடிக்கடி சந்திக்கும் யாழ்ப்பாணத்துப் பாத்திரங்கள். அவர்களது வாயில் தவழ்வதும் யாழ்ப்பாணத்துப் பேச்சுத்தமிழ். திருவிழா, வல்லைவெளி, மாட்டுவண்டில் சவாரி முதலியன உயிரூட்டமுடன் வர்ணிக்கப்படுகின்றன. 'முதற்சம்பளம்' என்னும் கதையும் ஒரு சிறந்த சிருஷ்டி. பதினொரு வயது நிரம்பாத சின்னராசா நாட்சம்பளத்தில் கருட்டுக்கொட்டிலுக்கு வேலை செய்யப்போகிறான். தந்தையை இழந்த சின்னராசாவை வேலைக்கு அனுப்புவதும், அவனது முதல்நாள் அனுபவமும் அழகுற எழுதப்பட்டுள்ளன. இக்கதையில் கையாளப்பட்ட யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழினால் வாசகர் கதையுடன் ஒன்றிப் போவதைக் காணலாம்

'அதெல்லாம் [வளரமுன்னுக்கு மாறிவிடும் இஞ்சை பார் நான் பிள்ளைக்குக் கொழுக்கட்டை அவிச்சு வைச்சிருக்கிறன், எங்கே முடிச்சை அவிழ் பாப்பம். ஓ இஞ்சை நம்பத்தான்...' என்று பொன்னம்மா கூறுகையில் நாமும் அக்குடும்பத்துடன் ஒன்றிவிடுகிறோம். 'மனிதக் குரங்கு' என்ற கதையில் வரும் கதாநாயகன் 'கந்தாஸ்' அனுதாபத்துக்குரிய பாத்திரமாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான். தனது மனைவியின் கெட்ட நடத்தையை உணராமல் அவளைப்பற்றி எல்லோருக்கும் புகழ்ந்து திரியும் பேயனான அவன் வாசகரின் அனுதாபத்திற்குரியவனே.

ஈழத்துச் சரித்திர நிகழ்ச்சிகளை வைத்துச் சிறுகதைகள் எழுதியமுதல்வர் இலங்கையர்கோனே. யாழ்பாடி, சிகிரியா, அனுலா முதலிய கதைகளிலே சரித்திர நிகழ்ச்சிகள் சிறுகதைக்குரிய விறுவிறுப்புடன் செல்கின்றன. இவ்விதமே மேனகை, தாய், மரியாமதலேனு முதலிய கதைகள் புராண நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கின்றன. 'பூத்துக்குலுங்கும் ஒரு மகிழின்கீழ், வெண்பட்டணிந்து கருங்கூந்தல் தோளிற்புரள தெய்வ மயன் கடைந்து நிறுத்திவிட்ட தந்தப்பாவை போல மேனகை நின்றாள். அவள் இதழ்க்கடையில் ஓர் இளமுறுவல், கண்களிலே ஒரு தாபம் (மேனகை பக் 72) 'யாழோசை உச்சஸ்தாயியை அடைகின்றது. அவனும் மேலே போவது போலத் தெரிகிறது; மேலே மேலே... (யாழ்ப்பாடி பக். 135) முதலிய பகுதிகளை இங்கு உதாரணமாகக் காட்டலாம். கவிஞன் ஒருவனின் கதை 'நாடோடி' "பழமை பழமை என்று பிதற்றிக் கண்களை மூடிக்கொண்டு தம் அற்பத் திறமையில் இறுமாந்து உட்கார்ந்திருக்கும் இவர்களுக்குப் புதுமையும், முற்போக்கும் எங்கே பிடிக்கப்போகிறது" (பக். 92). கவிஞன் சோமசுந்தரத்தின் கூற்று உண்மையில் ஆசிரியர் கூற்றே என்பதைக் கண்டுகொள்வது வாசகர்களுக்

(9-ம் பக்கம் பார்க்க)

# எழுத்துச் சீர்திருத்தம்

கி. வா. ஜகந்நாதன்

சமீபத்தில் தமிழக அரசு எழுத்துச் சீர்திருத்தம்பற்றிய ஆணை ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது. பெரியாரவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி இந்தச் சீர்திருத்தத்தை நடைமுறைக்கு உடனே கொண்டுவரவேண்டுமென்று அரசின் கீழ் பணியாற்றும் எல்லாத் துறைகளுக்கும் உத்தரவிட்டிருக்கிறது.

அந்தச் சீர்திருத்தம் வருமாறு. ஐ, ஔ என்ற இரண்டு எழுத்துக்களுக்குப் பதிலாக அய், அவ் என்பவற்றைஎழுதுவது; ணா, றா, னா என்பவற்றை ணா, றா, னா என்று எழுதுவது; ணை, லை, ளை, னை என்பவற்றை ணை, லை, ளை, னை என்று எழுதுவது.

இந்தச் சீர்திருத்தத்தால் அச்சுக்கோர்க்கும் வேலையும் தட்டெழுத்துப் பணியும் பயன் பெறும் என்பது அரசின் கருத்தாகும்.

இந்தச் சீர்திருத்தத்தை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். ஒன்று எழுத்துக் குறைப்பு; மற்றொன்றுஎழுத்து வடிவக்குறைப்பு.

முதலில் எழுத்து வடிவக் குறைப்பைப்பற்றிப் பார்த்துவிட்டு பிறகு எழுத்துக் குறைப்புப்பற்றி ஆராயலாம்.

உயிர்மெய்யெழுத்துக்கள் ஒரு சீராக வடிவம்பெற்றிருந்தால் அச்சுக்கோர்ப்பவர்களுக்கும் தட்டெழுத்தாளர்களுக்கும் பல வடிவங்களை அடுக்கவும் அடிக்கவும் அவசியம் இல்லாமல் போகும்; இதனுல் எழுத்தச்சுகள் உள்ள அறைகள் குறையும்; தட்டெழுத்துப் பொறியிலுள்ள எழுத்துப் பலகை (Key Board) சுருக்கம் அடையும்; இவற்றால் பின்னும் விரைவாக அச்சுக்கோர்க்கும் தொழிலும் தட்டெழுத்துப் பணியும் நடைபெற வழிபிறக்கும் என்ற எண்ணத்தில்தான் பெரியார் இந்த எழுத்துவடிவச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார்.

உயிர்மெய்யெழுத்துக்களில் ஆகாரத்தைக் காட்டப்பெரும்பாலும் ா என்னும் காலை எழுதிவருகிறோம் ஆனால் ணா, றா, னா என்ற மூன்றுஎழுத்துக்களும் கால்போடாமல் தமக்கென்று தனி வடிவத்தை உடையனவாக உள்ளன. அவற்றுக்கு அச்செழுத்துப் பெட்டியில் மூன்று அறைகளும், தட்டெழுத்துப் பொறியில் மூன்று தனியிடங்களும் இருக்கின்றன. அந்த மூன்று எழுத்துக்களையும் மற்ற உயிர்மெய்யெழுத்துக்களைப் போலவே கால் வாங்கி எழுதினுல் தனியாக உள்ள அந்த மூன்று அதிகப்படியான அறைகளும், தட்டும் இடங்களும் குறையும்.

அவ்வாறே உயிர் மெய்களில் ஐ காரத்தைக் குறிப்பிடப் பதினுன்கு எழுத்துக்களுக்கு ை என்ற குறியீட்டைப் பயன்படுத்துகிறோம். ஆனால் ணை, லை, ளை, னை என்ற நான்கு எழுத்துக்களின் வடிவங்கள் தனியே இருக்கின்றன. இவற்றுக்கு இரண்டுசுழிகளையுடைய 'ை' என்ற குறியீட்டைப் போடுவதில்லை. அவற்றுக்கும் மற்ற உயிர் மெய்யெழுத்துக்களின் ஐ காரங்களைப் போலவே இரண்டு சுழியுள்ள குறியீட்டைப்போட்டால் நான்கு எழுத்து வடிவங்கள் குறையும். ஆகவே இந்த எழுத்துச் சீர்திருத்தத்தால் ஏழு எழுத்து வடிவங்கள் குறைந்து அச்சுப்பெட்டியும் தட்டெழுத்துப் பலகையும் சற்றே குறைந்து வேகமாகப் பணியாற்ற உதவும்.

இத்தகைய சீர்திருத்தத்தை உடனே எல்லாத்துறைகளிலும்நடைமுறைக்குக்கொண்டு வரவேண்டும் என்ற ஆணை பிறப்பித்ததனுல் பலருக்குச் சிரமம் உண்டாகலாம். பல காலமாகப் பழகிவிட்டமையால் அந்த வடிவங்களைஇழக்க மனம் இல்லாமல் இருக்கலாம். தமிழகமேயன்றித்தமிழ் வழங்கும் இலங்கை, பர்மா, மலேசியா முதலிய இடங்களிலுள்ள தமிழர்கள் சற்றே தடுமாறவும்கூடும். ஆதலால் மெல்லமெல்ல இந்தச் சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதே நலமென்று தோன்றுகிறது. சில துறைகளில் இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரச்செய்து பிறகு விவரிக்கலாம். இது உணர்ச்சியோடு தொடர்புடைய காரியமாதலால் ஒரேயடியாக மாற்றத்தைப் புகுத்தாமல் மெல்ல மெல்ல நடைமுறைக்குக் கொண்டுவருவதுதான் நல்லது.

பெரியார் கொண்டுவந்த திருத்தம் என்ற ஒன்றையே நினைத்து இந்த மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மாற்றத்தால் அச்சிலோ தட்டெழுத்திலோ புதிய வடிவம் எதையும் சேர்க்கப்போவதில்லை, இருக்கும் வடிவங்களையே பயன்படுத்துவார்கள்.

எழுத்து வடிவத்தைக் குறைத்து ஒரு சீரான குறியீடுகளை அமைக்கவேண்டுமென்ற முயற்சி பல ஆண்டுகளாக இருந்துவருகிறது உயிர்மெய்யில் கி, ஙி, முதலிய இகரம் இணைந்த எழுத்துக்களுக்குத் தனியே பதினெட்டு அச்சுக்கள் தேவைப்படுகின்றன. அப்படியே உயிர்மெய் ஈகாரங்களுக்கும் பதினெட்டு தனித்தனி அச்சுக்கள் வேண்டியிருக்கின்றன. அந்த இரண்டு குறியீடுகளையும் உயிர்மெய்யோடு ஒட்டாமல் காலைப் போலவும் இரு சுழிகளைப் போலவும் தனியே அமைத்தால் இரண்டே குறியீடுகள் இருந்தால் போதும். 34 வடிவங்கள் குறைந்து விடும். இரண்டு எழுத்துக்களின் குறியீடுகளாகிய விசிறிகளைத் தனியாக்கி அச்சுவார்க்கச்செய்து சுதேசமித்திரன்வாரப்பதிப்பில் பயன்படுத்தினர் சுதேசமித்திரன் ஆசிரியர் அமரர் ஸி, ஆர். ஸ்ரீநிவாசன். சில ஆண்டுகள் அந்த முறையை அவர் நடைமுறையில் பயன்படுத்தினுலும்படிப்பவர்களுக்கு அதில் நாட்டம் எழவில்லை. அது மட்டுமன்று, மற்றவர்களும் அந்த முறையைப் பின்பற்றவில்லை. அச்சுக்கலையும், தட்டெழுத்துத் துறையும் அறிந்த வல்லவர்களுக்கு அதனுல் உண்டாகும் நலம் தெரியும். அவர் பெரியார் அல்லவே; ஆகவே அவர் கொண்டுவந்த திருத்தம் நாளடைவில் ஆதரிப்பார் இல்லாமல் மறைந்துவிட்டது.

உயிர் மெய் உகரத்தில் ஒரே சீரான குறியீடுகள் இல்லை. அவை மூன்று வேறுவடிவங்களைப் பெறுகின்றன. கு, டு, மு, ரு, ழு, ளு என்னும் ஆறும் ஒருவகை. ஙு, சு, பு, யு, வு என்னும் ஐந்தும் ஒருவகை; ஞு, ணு, து, நு, லு, று, னு என்னும் ஏழும் ஒருவகை. இவை வெவ்வேருக இருப்பதோடுபிரிக்கமுடியாமல் ஒட்டியுள்ள குறியீடுகளை உடையவையாக இருக்கின்றன. இந்தக் குறியீடுகளிலும் ஒரு சீராகவும் ஒட்டாமல் தனியே அமைவதாகவும் ஒன்று இருந்தால் பதினேழு வடிவங்கள் குறையும். இனிமேல் புதிய குறியீட்டை உண்டாக்காமல் உயிர்மெய் ஆ காரத்துக்கும், உயிர்மெய் ஐ காரத்துக்கும் முன்பே இருக்கும் ா, ை என்ற குறியீடுகளைப்போடுவதுபோல இருந்தால் படிப்பவர்களுக்கும் சிரமம் இராது; புதிய எழுத்தச்சை மேற்கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை உயிர் மெய் ஊ காரமும் இத்தகையதே.

அப்படி ஒரு குறியீட்டை நாம் நடைமுறையில் ஆண்டு வருகிறோம். ஆனால் தமிழ் எழுத்துக்களில் அல்ல. தமிழில் இணைந்துபோன வடமொழி எழுத்துக்களுக்கு அந்தக் குறியீடுகளைப்பயன்படுத்துகிறோம். விஷ¬ஹ¬மாயூன், ஜ¬ம்மா, மகுதி, பிக்ஷ¬ஷி என்று வருவனவற்றில் உகரத்தைக் குறிக்க ¬ என்ற அடையாளத்தை எழுதுகிறோம். அப்படியே ஜூன், ஜூலை, முஹூர்த்தம் என்பவற்றைப் போன்றவார்த்தைகளில் ஊகாரத்தைக் குறிக்க ூ என்ற அடையாளத்தைப் போடுகிறோம். இவை உயிர்மெய்யோடு ஒட்டாமல் தனியே உள்ள குறியீடுகள். கிரந்த லிபியில் இந்தக் குறியீடுகளைப் பயன்படுத்துகிறார்கள்.

தமிழ் உயிர்மெய் உகரத்துக்கும் ஊகாரத்துக்கும் இந்தக் குறியீடுகளை அமைத்து க¬, ங¬, ச¬, ஞ¬ என்று வழக்கத்தில் வந்து விட்டால் அச்செழுத்துப் பெட்டியிலும், தட்டச்சுப் பலகையிலும் பின்னும் சிக்கனம் ஏற்படும். ஆனால் இவை வடமொழிக் குறியீடு என்ற எண்ணமும் அது காரணமாக இவற்றில் வெறுப்பும் தோன்றினுல் அவை சீர்திருத்த முயற்சிக்கு இடம் கொடுக்காது. வழக்கம் இல்லாமல் இருப்பதைப் புதியதாகக் கொண்டு வருவதில்தான் அதிகச் சிரமம் இருக்கும். கல்வெட்டுக்களிலும், இன்றைய அச்சிலும் எழுத்திலும் இந்த இரண்டு குறியீடுகளும் வழக்கத்தில் வந்துவிட்டன. அவற்றை மற்ற எழுத்துக்களுக்கும் இணைத்தால் எழுத்து வடிவச் சிக்கனம் அமையும்.

உணர்ச்சி காரணமாக இந்தக் குறியீட்டை எதிர்ப்பவர்கள் இருப்பார்கள். அதே போல மற்ற இரண்டு எழுத்து மாற்றங்களையும் உணர்ச்சி காரணமாக ஏற்றுக்கொள்ளாதவர்களும் இருக்கத்தான் இருப்பார்கள். ஒருவகையினர் உணர்ச்சியைப் போற்றி மற்றொருவகையான உணர்ச்சியைப் புறக்கணிப்பது நேர்மை ஆகாது.

இனி, உயிரெழுத்துக்களைக் குறைப்பதுபற்றிச் சிறிது கவனிக்கலாம். ஐ, ஔ என்ற இரண்டு உயிரையும் எடுத்துவிட வேண்டும் என்பது தமிழக அரசின் ஆணை. முன்னே சொன்னவை எழுத்து வடிவச் சீர்திருத்தம்- இதுவோ எழுத்தையே குறைப்பது. முன்னே சொன்னது அச்சுத் தொழிலுக்கும் தட்டச்சுப் பொறிக்கும் தொடர்புடைய சீர்திருத்தம். இதுவோ இலக்கண வரம்புக்குள் புகும் சீர்திருத்தம்; நெடுங்காலமாக வந்த முறையை மாற்றுவது "எழுத்து வடிவமும் நெடுங்காலமாக வந்தல்லவா?" என்று கேட்கலாம், அப்படி இல்லை, கல்வெட்டுக்களைப் பார்த்தால் எழுத்துக்கள் எப்படியெல்லாம் வடிவம் மாறி வந்திருக்கின்றன என்று தெரிந்து கொள்ளலாம், ஐ, ஔ என்ற உயிரை எடுப்பது அத்தகையது அன்று உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு என்பது மிக மிகப பழங்காலம் முதல் வந்த வழக்கு. அதை மாற்றவேண்டியது இன்றியமையாதது அல்ல தமிழ்ப் புலவர்களைக் கூட்டி அந்தத் திருத்தத்தைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்திருக்க வேண்டும்

அந்த இரண்டு எழுத்துக்களைக் குறைப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களையும் கவனிக்கத்தான் வேண்டும்.

ஐயர், ஐயங்கார் என்பவற்றை அடிநகமாக அய்யர், அய்யங்கார் என்றே எழுத

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் எழுத்துக்களுக்கேற்றதொரு தட்டச்சை அமைத்தால் என்ன?

வெ. சு. நடராசா

காலத்துக்குக் காலம் பத்திரிகைகளில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி வெளிவரும் கட்டுரைகள் சிலவற்றைப் படித்திருக்கின்றேன். தமிழ் மொழி வளர்ச்சியை விரும்புவோர் சீர்திருத்தம் வேண்டுமென விரும்புவதிலும் சில நியாயங்களும், கருத்துக்களுமிருக்கின்றன. சீர்திருத்தம் வேண்டாமென்போரிடத்திலும் தகுந்த நியாயங்களும், கருத்துக்களும் இருக்கின்றன.

ஆனால்தற்கால அச்சுமுறைக்கு ஏற்றவாறு எழுத்துக்களைச் சீர்திருத்தவேண்டுமென நினைப்பவர்கள் பின்வரும் எனது கருத்துக்களையும் ஆராய்தல் நல்லதென நினைக்கின்றேன்

முதலில் 'ஐ' என்பதை 'அய்' என்று எழுதலாமென கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன ஓசையில் 'ஐ'யுக்கும் 'அய்'யுக்கும் வித்தியாசம் உண்டு 'ஐ' தமிழ்மொழியின் சிறப்பான எழுத்துக்களில் ஒன்று சிங்களத்தில்கூட 'ஐ' என்ற ஒலியுடைய எழுத்து ஒன்று இல்லை 'ஐ'க்குப் பதிலாக 'எய்' என்றே எழுதுவார்கள் உதாரணமாக, முதலை என்ற வார்த்தையைச் சிங்களவர் முதலெய்' என்று தான் எழுதுவார்கள் 26 எழுத்துக்களையுடைய ஆங்கில மொழியில் 'ஐ' என்ற ஒலிக்கு ஏற்ற I என்ற எழுத்து உண்டு

இனி 'கெள' என்ற எழுத்தைக் 'கவ்' என்று எழுதலாமெனக் கூறப்படுகிறன. இங்கேயும் 'கெள'வுக்கும் 'கவ்'வுக்கும் ஓசையில் மிகுந்த வித்தியாசமுண்டு. கெளரவ செயலாளர் என்பதற்கும் 'கவ்ரவ' செயலாளர் என்பதற்கும் உச்சரிப்பில் வேறுபாடு உண்டு.

தட்டச்சு யந்திரத்துக்கு ஏற்றமாதிரித் தமிழ் எழுத்துக்களை மாற்றியமைக்கவேண்டுமென விரும்புபவர்கள் 'ஈ' என்ற தமிழ்எழுத்தை 'இ'க்கு ஒரு சுளி சேர்த்தும் எழுதலாமே. 'கூ' என்ற தமிழ் எழுத்தைக் 'கு'வுக்கு ஒரு சுளி சேர்த்து எழுதினுல் தமிழ் எழுத்துக்களைக் கற்கும் பிற மொழியாளருக்கு மேலும்சுலபமாக இருக்குமே.

'ணை' என்ற எழுத்தை 'ணை' என்று எழுத விரும்புவோர் 'பணை' என்ற வார்த்தையை 'பண்ணை? என்று எழுதினுல் எப்படியிருக்கும். 'முன்னைநாள்' என்ற எழுத்தை 'முன்னைநாள்' என்றே எழுத வேண்டிவரும். இப்படியே எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம் புதியமாதிரி எழுத எடுக்கும் நேரத்தையும் இடத்தையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இனி தட்டச்சுப்பொறிவிடயத்துக்கு வருவோம் தமிழ் மொழி வளர்ச்சிபற்றிச் சிந்திப்போர் தமிழ்மொழியினின்றும் சில எழுத்துக்கள், இலக்கங்கள்மறைகின்றனவே என்று சிந்திககிறார்களில்லையே இக்காலத்தில் தமிழ் எண்கள் மறைந்து இறக்குமதிசெய்யப்பட்ட 1 2, 3, 4, 5. 6, 7, 8, 9, 10 என்னும் எண்கள் கையாளப்பட்டு வருகின்றன. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்விரும்புவோர் இதைக் கண்டிககின்றிலர் சிங்கள மொழியில் இருந்த எண்கள் இடம்தெரியாது மறைந்துவிட்டன. இதேபோன்ற கதி நமது தமிழ் எண்களுக்கும் கூட நேர்ந்துவிடும். நமது கருமகூடம் அல்லது பணிமனைகளில் அலுவலகங்களில் உபயோகப் பட்டுவரும்தட்டெழுத்துப்பொறியிற்கூட இந்த ஐரோப்பிய எண்களல்லவா காணப்படுகின்றன. தமிழ் மொழி கலாச்சாரம் பாதுகாக்கப்படவேண்டுமெனவிரும்புவோர் ஏற்கனவே தமிழிலிருக்கும் இலக்கங்களை நீக்கிவிட்டுப் புதிய இலக்கங்களைப் புகுத்திவிடுவது முறையா? ஆங்கிலத் தட்டெழுத்துப் பொறிக்கு அமைவாகத் தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்ய எண்ணுவோர் இதை உணரல்வேண்டும் 26 எழுத்துக்களை வைத்துக்கொண்டே ஆங்கிலத் தட்டெழுத்துப் பொறி அமைத்தனர் மேல்நாட்டோர் நாமோ அவர்கள் அமைத்துத்தந்த தட்டெழுத்துப்பொறிக்கு ஏற்றமாதிரி நமது தமிழ்மொழி எழுத்துக்களைக் குறைக்க எண்ணுகிறோம், ஆங்கிலத் தட்டெழுத்துப் பொறி அமைக்கப்பட்டகாலத்தில் இருபத்தாறுக்குமேற்பட்ட எழுத்துக்கள் ஆங்கிலத்திலிருந்து தட்டெழுத்துப் பொறிக்கு ஏற்றவகையில்எழுத்துக்களைக்குறைத்துக் கொண்டதாகத்தெரியவில்லை இயற்கையாகவேயுள்ள 26 எழுத்துககளுக்கும் ஏற்றவகையில் பொறியை அமைத்தனர் தயவுசெய்து சாலை இளந்திரையனே, அறிஞர் தெ பொ. மீனுட்சிசுந்தரனுரோ அல்லது தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்ய விரும்பும் கல்விமான்களோ இதற்குத் தகுந்த விளக்கம் தரட்டுமே. நாம் சட்டையைத்தைத்துக்கொண்டு அதற்கேற்றவகையில் சாரத்தை அமைக்க முற்படுகிறோம், நாமும் ஏன் ஆராய்ச்சிசெய்து தமிழ் எழுத்துக்களுக்குத் தகுந்தமுறையில் தட்டெழுத்துப் பொறியை அமைத்தல் கூடாது? உதாரணமாகச் சில எண்களைக்கொண்டு கூட்டல், கழித்தல் இயந்திரத்தை முதலில் கண்டுபிடித்தவர்கள் நாளடைவில் பல எண்களைக் கொண்டு ஒரே இயந்திரத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் எல்லாம் ஏற்படுத்திக்கொள்ளவில்லையா? இவ்வியந்திரங்களைக் கையாளும் முறையும் வேறல்லவா? இந்த நவீன சாதனங்களை ஏற்படுத்திக் கொண்டதால் தமிழ்மொழியின் விருத்திக்குத் தடையிருக்காதன்றோ, எழுத்துச் சீர்திருத்தம்பற்றி மறுபரிசிலனை செய்யவேண்டி ஏற்படுமல்லவா,

# ஆழிக்குமரனின் அபிலாஷை!

ஓர் ஆண்டு இடைவெளிக்குள் பத்து வெவ்வேறு நிகழ்ச்சிகளில் வேறு எவரும் சாதித்திருக்காத - சாதிக்கமுடியாத பத்து உலகசாதனைகளை நிலைநாட்டவேண்டும் என்பதே ஆழிக்குமரன் ஆனந்தனின் அபிலாஷையாம், இந்த வகையில் 10-8-78 அன்று ஒரு சாதனையை நிலைநாட்டினார், இவ்வாறான 4 உலக சாதனைகள் புரிந்துவிட்டார்- மேலும் 6 சாதனைகளை நிகழ்த்தவேண்டும்-

ஓர் ஆண்டுக்குள் பத்து சாதனைகளைப் புரியும் நோக்கம் நிறைவேறியபின் வேறு முயற்சிகளில் அவர் ஈடுபடப் போவதில்லையாம்

உலக சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகத்தில் 1980-ம் ஆண்டுக்கான பிரதி 1979 ஆகஸ்ட் மாதத்தில் எடிட்செய்யபபடும் என்பதால் அதற்குமுன் இவரது சாதனைகளை யாரும் முறியடித்தால் அதனை மீண்டும் முறியடிப்பதற்கு அவர் முயற்சி எடுப்பாராம்- தமதுநோக்கத்தைப் புரிந்துகொண்டுள்ள இலங்கையர் தம்மைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்றும தமது குறிக்கோள் நிறைவேறிய பின் இலங்கையர்களால் நிகழ்த்தப்படும சாதனைகளைத் தாம முறியடிக்க முயலப்போவதில்லையென்றும் ஆனது தமக்குச் சுமார் 40 வயதாகும்வரை ஆர்வமிருப்பின் உலகின் ஏனைய சாதனைகளை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவரப்போவதாகவும் ஆழிக்குமரன் தெரிவித்திருக்கிறார்,

தமது பத்துச் சாதனைகளும் நிறைவேறினால் அவை ஒவ்வொன்ருகப் பல பேராலும் முறியடிககப்பட்டாலும் ஒரு வருடத்தில் தனிமனிதன் ஒருவன் நிகழ்த்திய சாதனை என்ற வகையில் கின்னஸ் புத்தகத்தில் நிலைத்துவிடக்கூடுமென்று அவர் நம்புகிறார்.

ஆழிக்குமரனும் அவரது சகாக்களும் சேர்ந்து 'அட்வஞ்சரஸ்' என்ற விளையாட்டுக்கழகம் ஒன்றினை ஆரம்பித்துள்ளார்கள். உலக சாதனைகள் பலவற்றை முறியடிக்கும் ஆர்வத்துடன் பல இளைஞர்கள் இக்கழகத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களை ஊக்குவிக்க விரும்பும் நல்ல இதயம் படைத்தவர்களையும், விளையாட்டு வீரர்களையும், நிதி உதவிபுரிய விருமபுகிறவர்களையும்தங்களுடன் தொடர்பு கொள்ளுமபடி ஆழிக்குமரன் ஆனந்தன் கோருகிறார். [பெ]



[தொடர்ந்து ஆறுநாட்கள் 'டுவிஸ்ட்' நடனம் ஆடி உலக சாதனையை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது ஆழிக்குமரன் ஆனந்தன்]

# அரங்கும் அவையும்

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

## 'அதிமானிடன்' அரங்குக்கு வந்தான் தரத்தில்விஞ்சி தலைநிமிர்ந்தான்

இலங்கை அவைக்காற்றுக் கலைக் கழகம் நடந்த செவ்வாய் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 'அதிமானுடன்,' 'தலைவர்' என்ற இரு நாடகங்களை மேடையேற்றியது. கவிஞர் நுஃமானின் கவிதைக்கு ஆடல் அபிநயம், காட்சி என்பன கலந்துவரும் வகையில் மேடைக்கோலம் கொடுத்தவர்கள் திரு. மௌனகுரு அவர்கள்.

திரை விலகியது; செய்யுள் செப்புபவர் எடுப்பாய் வாசிகக, இனிய மங்கையர் பின்னணி பாட, சூரியன் சுற்றுவது, வெடித்த துண்டுகள் சிதறிச் சுற்றுவது, குளிர்ச்சியுற்று பூமிதோன்றுவது அனைத்தையும் ஒளி அமைப்பில் காட்டியவிந்தை எம்மை ஈர்த்தது, குறுகிக் கோணி இருந்த ஆதிமனிதர்களின்தோற்றம், வளர்ச்சியை காட்டும்விதத்தில் அமைந்த மெல்லிய அசைவுகள், ஆட்டம், பூரண வளர்ச்சியைக் காட்டிய சற்று விஞ்சிநின்ற ஆட்டம் இசை தாள மெருகுடன் எம்மையும் அக்காலத்துக்கே இழுத்துச் சென்றது. தொடர்ந்து பசித்த நிலையில் வேடுவன் பச்சை இறைச்சியை உண்ணும் பாங்கை ஊமம் முறையில் காட்டி, குகைக்கருகே படுத்திருந்தபெண்ணைன்புடைத்த அங்க ஈர்ப்பினால் இன்னொரு பசி எடுக்க ஆரத்தழுவும் நிலை காட்டப்பட்டது. பக்குவமாய் காட்டினர்; ஆனால் ஆதிமனிதன் இக்கட்டத்தில் உணர்ச்சிவசத்தால் அதித அவசரத்தில் செயல்பட்டிருப்பான்! இசை வேகம், நடை வேகம், பாவனைவேகம் இவ்விடத்தில் இருந்திருந்தால் இயற்கைத்தன்மை கூடச் செறிந்திருக்கலாம். பின் இடையர் நிலையும்காட்டி, சற்று நாகரீக வளர்ச்சி அடைந்தநிலையை தேரோட்டும் பாகன் ஆரோகணித்து வரும் அரசன் என்ற நிலையில் நாட்டுக்கூத்து நடை ஆடல் சேர ஊமமுறையில் காட்டினர், இரு நடிகர்கள் தேரோட்டும் காட்சியை காட்டிய பாங்கு அற்புதம். அடுத்த கட்டத்தில் நெறியாளரின் முத்திரை நன்கு பதித்து உச்சநிலைக்கு நாடகம் சென்றது. நீரிலே மனிதன் கப்பல்விடும்காட்சி கப்பல்பாட்டுடன்கரியமுகில் மோதிடும் அலை, வீசிடும் காற்று என்பவற்றின் மத்தியில் அவல உணர்வுபாய்ச்சி 'ஆ' என்று வாய்பிளக்க வைத்தது. கப்பல் செலுத்தியோரின் பயங்கர பாவனைகள் அவ்வேளை கரிய முகிலாக பாய்ந்து பாய்ந்து ஆடிய மௌனகுருவின் உக்கிர ஆட்டம், நீலநிற அணியில் அலைபோல் வீசி ஆடிய கலைஞரின் ஆட்டம், சுழன்றிடும் காற்றாய் சுற்றி ஆடிய இன்னொருவரின் ஆட்டமும் இவற்றை மெருகூட்டிய ஒளிப் பாய்ச்சல்களும், குரலொலி இசையெல்லாம் சேர்ந்து மனிதனின் கண்டங்கள் கடந்த கஷ்டத்தைக் காட்டின. தொடர்ந்து மலையைக் குடைந்து தண்டவாளம் போடுதல் முதல் ரொக்கட் மூலம் விண்வெளிபோகும் காட்சிவரை அழகாகக்காட்சிகள் இடம்பெற்றன. மலையில் வெடிவைத்து, வெடிக்கும் கட்டத்தில் தாக்குண்ட மனிதன் காயமுற்றுவிழுவது மற்றையோர் உதவிக்கு ஓடுவதுடன் அக்காட்சியை விட்டிருக்கலாம். 'வலிக்கிறதா' என்ற ஒரு வார்த்தையை அந்த அவலக்கட்டத்தில் பெண்ணொருத்தி பேசுகிறாள். அப்போ சுவைஞர்கள் 'கொல்' என்று சிரிக்கிறார்கள். ஏதோ ஒரு குறை அதில். அந்த வார்த்தையை அகற்றியிருக்கலாம். நாடகத்தில் ஒரு சொல் மட்டும் ஏற்படுத்தும் மாற்றங்கள்! எழுத்தாளர்களுக்கு இது ஓர் எச்சரிக்கை.

இத்தகைய வளர்ச்சிப் பின்னணியில் மாந்தரில் பலர் பிச்சைக்காரப் பரிதாப நிலையில் இருக்கும் நிலைமை காட்டப்படுகிறது. அவர்களது பாடல் பாவனை உருக்கமளித்தன. ஒரு சிலர் மேடையின் இடப்பக்கத்தால் இறங்கி, அவையினர் களத்துக்கு வந்து வலப்பக்கத்தால் திரும்பவும் மேடைக்குச் சென்றனர். அவ்வேளை அவையோர் சிலர் பிச்சையிட்டனர். நாடகத்தில் ரசிகர்களும் ஒன்றும் உத்தி இக்காட்சியை மேம்படுத்தியதெனலாம். அடுத்து தொழிலாளிகள் வேலைசெய்தல் கஷ்டமுறல் போன்ற சம்பவங்கள் நிகழ்கின்றன. 'பழைய கஞ்சியைகுடியோம் பழைய கஞ்சியை குடியோம்' என்று திரும்பத் திரும்பப் பாடும் இடத்தில் புதிய பாதையில் செல்வோம் என்ற மறைபொருள் பார்வையாளர் மனதில் ஊடுருவுகிறது. இறுதியில் தொழிலாளிகள் வீறு கொண்டு ஆடும் உக்கிர நடனம் நாட்டுக்கூத்து உச்ச ஸ்தாயியில் இடம்பெறும் களைகட்டிய ஆட்டமாய் பார்வையாளர்களின் பலத்த கைதட்டுதலைப் பெறுகிறது. கலைவடிவில் இடம்பெற்ற இந்த நாடகம் காத்திரமான காலத்துக்குகந்த செய்தியை சுவைஞரிடம் பாய்ச்சி வெற்றியீட்டி நிற்கிறது. வெற்றிக்கு காரணங்கள் நல்ல கருவுள்ள கட்டுக்கோப்புள்ள நாடகப் போக்கு. கவனமெடுத்து ஆட்டங்கள் பழக்கி பக்குவமாக நெறிப்படுத்திய தன்மை. கவிதை வடிவில் யாத்த நுஃமான், மேடை வடிவம் கொடுத்த சி. மௌனகுரு தலையை நிமிர்த்துகிறாகள், கரகோஷம்- தொடர்ந்து கைகுலுக்கலுகள், பார்வையாளர்கள் வளர்த்துவிட்டார்கள். ரசித்தால் போற்றுவர். ஏய்க்க முனைந்தால் நிலைவேறு கலை அரங்கை அணிசெய்யமுயல்வோரே கவனம். 'தலைவர்' நாடகம் தனித்துவ பாணியில் மனிதனின் மடமையை-மந்தைப் போக்கை சாடும்வகையில் சிரிப்பைச் சிந்தவைத்து சிந்திக்கச் செய்தது ஈழத்தமிழ் நாடகம் வளர்வது பால் வார்க்கும் செய்தி.

# எழுத்துச் சீர்திருத்தம்....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறோம். அங்கெல்லாம் ஐ என்ற எழுத்துக்குப் பதிலாக அய் என்ற இரண்டெழுத்துக்கள் வருகின்றன. அப்படி எழுதுவதும் படிப்பதும் வழக்கத்தில் வந்துவிட்டன. ஆகவே மற்ற இடங்களிலும் அப்படியே எழுதிவிட்டால் ஓரெழுத்துக்குறையும் என்பது உயிரை எடுப்பவர்களின் வாதம். அய்ந்து, அய்ம்பொறி என்றே எழுதலாம் என்பது அவர்கள் யோசனை. அப்படியே எழுதவேண்டும் என்பது அரசின் ஆணை. 'ஔவை என்பதைக் குழந்தைகள் மூன்று எழுத்துக்களாகக் கொண்டு ஒ-ள-வை என்று படிக்கிறார்கள். அவ்வை என்றால் இந்த மயக்கமும் இல்லை, எழுத்துச் சிக்கனமும் அமைகிறது' என்பது சிலர் வாதம். அப்படியானால் கெளவி என்பதைக் கவ்வி என்று எழுதலாமே! அதையும் கெ-ள-வி- என்று மூன்று எழுத்துக்களாகப் படிக்க வாய்ப்பு இருக்கிறதே!

ஐ, ஔ, என்னும் இரண்டு எழுத்துக்களின் குறைப்பை உயிரெழுத்துக்களின் அளவில் மேற்கொண்டிருக்கிறார்கள். 'அவர்கள் ஐந்து பேர்' என்று எழுதுவதை, 'அவர்கள் அய்ந்து பேர்' என்று எழுத வேண்டும். இப்படிப் பிரிக்காமல் அவர்களைந்து பேர் என்று வரும்போது அவர்களய்ந்துபேர் என்று எழுதுவது தானே முறை? தனி உயிரை எடுத்துவிட்டு உயிர் மெய்யை மாத்திரம் வைத்துக்கொள்வதில் ஓர் ஒழுங்குமுறை இல்லையே!

ஐக்குப் பதிலாக அய்என்பது போலியாக வரும். எல்லா இடங்களிலும் அப்படி வருவதில்லை, ஐயர் என்பதை அய்யர் என்று எழுதலாம்; ஆனால் ஐராவதம் என்பது அய்ராவதம் என்று எழுதுவதில்லை; அயிராவதம் என்றே எழுதுகிறோம் அய், அயி என்ற இரண்டும் போலிகளே. ஐ பிறக்கிற இடம் வேறு; மற்றவை பிறக்கிற இடங்கள் வேறு. ஐ என்பது ஓர் எழுத்து. அய் என்பவை இரண்டெழுத்துக்கள். இலக்கணத்தில் ஓரெழுத்தொரு மொழி என்ற வரையறை உண்டு. ஐ என்ற எழுத்துச் சொல்லாக வரும் போது, அழகு, தலைவன், கபம், மென்மை முதலிய பொருள்களை உடைய ஓரெழுத்தொருமொழி ஆகிறது. அதை எடுத்துவிட்டால் அந்த இலக்கணமே பயனின்றிப் போய்விடும்.

வேலை என்ற சொல் இருக்கிறது. அது ஓரே மொழியாகவும் இருக்கலாம். தொடர் மொழியாகவும் இருக்கலாம். பணியைக் குறிக்கும்போதும் வேல் என்ற சொல்லின் இரண்டாம் வேற்றுமையைக் குறிக்குப்போதும் அது ஒரு மொழி. ஆனால் வேலாயுதத்தையுடைய தலைவன் என்ற பொருளைக் குறிக்கும்போது அது இரண்டு சொற்களையுடைய தொடர் மொழி. 'தனிவேலை நிகழ்த்திடலும்' என்று கந்தர் அனுபூதியில் வருகிறது. சேர்த்து எழுதும்போது வேலை என்று எழுதிப்படிக்கிறோம். பதவுரை எழுதும்போது வேல் ஐ என்று பிரித்து எழுதிப் பொருள் சொல்கிறோம். ஐயை விலக்கிவிட்டால் வேல் அய் என்று பிரிக்கவேண்டும். அப்போது வேலை என்ற சொல்லில் உள்ள இறுதி எழுத்து எப்படி அய் என்று இரண்டெழுத்துக்களாக மாறியது என்ற மயக்கம் வரும் அங்கே வேலய் என்று இருந்தால் இந்த மயக்கம் வராது- உயிருக்கு ஒரு விதியும் உயிர்மெய்க்கு ஒரு விதியும் கொள்வதனால்வரும் சங்கடம் இது- அதனால் உயிர் மெய் ஐயையும் ஔவையும் கூட எடுத்துவிடவேண்டும் என்று நான் சொல்ல வரவில்லை- அதுவேறு செய்தி.

மற்றொன்று, தமிழ் இலக்கணத்தில் உயிரளபெடை என்ற ஒன்று உண்டு. நெட்டெழுத்துக்களின் ஓசை மிக்கு ஒலித்தால் அதை அளபெடை என்பார்கள். அளவு என்பது ஓசைக்கணக்காகிய மாத்திரைக்குப் பெயர். அது எடுத்து ஒலிப்பது அளபெடை. உயிரளபெடை, மெய்யளபெடை என்று இரண்டுவகை அளபெடைகள் உண்டு. எப்போதெல்லாம் அளபெடை வரும் என்பதை இப்போது பார்க்க வேண்டாம்.

'ஐ என்பது நெட்டெழுத்து. அது அளபெடையாகும்போது அதாவது சற்றே நீண்டு ஒலிக்கும்போது, ஐஇ என்று அதை எழுதவேண்டும். இகரம் அடையாளத்துக்காக இருப்பதே ஒழிய அதை இகரமாக ஒலிக்கக்கூடாது. ஐய என்பதில் ஐ அளபெடுத்தால் ஐஇய என்றுவரும். ஐ என்ற எழுத்தையே விலக்கிவிட்டால் அய்இய என்று எழுத வேண்டும்;' இப்பொழுது யார் ஐயா இந்த அளபெடையையும் இழவெடையயும் எழுதுகிறார்கள்? என்று எளிதில் பரிகாசம் செய்யலாம். ஆனால் அந்த அளபெடை வந்த பழைய இலக்கியங்களையும் அதைப் பற்றிச் சொல்லும் இலக்கணங்களையும் என்ன செய்வது? 'தமி மிகப் பழமையான மொழி' என்று சொல்லி மார்தட்டுகிறோமே! இந்த எழுத்துக் குறைப்புக்காக அந்தப் பழைய இலக்கண இலக்கியங்களைக் குப்பையில்போட்டு விடுவதா?

ஔவை என்பதை அவ்வை என்று எழுதுகிறோம். அங்கும் அது போலிதான், ஔதாரியம் என்பதை அவுதாரியம் என்று எழுதுகிறோம். ஔடதம் என்பதை அவ்டதம் என்று எழுதுவதில்லை; அவுடதம் என்றே எழுதுகிறோம். இயல்பானது ஒன்றாகவே இருக்கும்; போலிதான் வேறு வேறாக மாறும். ஆகவே ஏதேனும் ஒரு போலியை வைத்துக் கொண்டு இயல்பை மாற்றுவது முறையாகாது.

பாரத நாட்டில் திராவிட இன மொழிகள் அனைத்திலும் ஐ, ஔ என்ற எழுத்துக்கள் இருக்கின்றன. அப்படியே வட இந்திய மொழிகளிலும் உள்ளன. திராவிட மொழியினங்களில் ஐயும் ஔவும் தமக்கென அமைந்த சில சிறப்பான இயல்புகளை உடையன. அவற்றை எடுப்பது தவறு. மொழியியல் அறிந்தவர்கள் இந்தச் சீர்திருத்தத்தை ஏற்கமாட்டார்கள். தமிழ் இலக்கண இலக்கிய அறிவுடையவர்கள் நிச்சயமாக இதைச் சீர்திருத்தம் என்று ஏற்க மறுப்பார்கள். இது ஒரு சிலையின் அழுக்கை மாற்றுகிறேன் என்று தொடங்கிச் சிலையையே சுரண்டும் செயலைப் போன்றது

ஆகவே, தமிழக அரசு இவற்றையெல்லாம் சிந்தித்து, அறிஞர்களைக் கூட்டி அவர்கள் கருத்தையும் உணர்ந்து, இந்தச் சீர்திருத்தத்தில் ஏற்கத் தகாதனவற்றை விலக்கிவிட வேண்டுமென்பதே என்னுடைய முறையீடு.

—நன்றி: கலைமகள்

# நடிப்புக் கலை

## கற்பனையை உண்மை என்று நம்பலாமா?

பிறர்பொருட்டுநாம் அனுபவிக்கின்ற உணர்வுகளாலும் (Vicarious Experience) நடிகனின் ஆற்றல் வளர்ச்சிபெறுகின்றது. சிலநூல்களைப் படிப்பதன்மூலம் இதற்கான அடிப்படைகள் அமையும் கீழேதரப்படும் வகையைச் சேர்ந்த நூல்களைப் பயிலுனர் படிக்கலாம்,

I. ஜலதீபம்- சாண்டில்யன்
பொன்னியின்செல்வன்- கல்கி கிருஷ்ணமூர்த்தி
டோவிற் கொப்பர் பீல்ட் - சார்லிஸ் டிக்கன்ஸ்
குற்றமும்தண்டனையும்- டொஸ்ரோவஸ்கி
தொல்காப்பியம், பொருளதிகாரம்

II. பாப்லோ பிக்காஸோ, வான்கோ, எல்கிறக்கோ போன்றவர்களின் ஓவியங்களைப் பயிலுனர் பார்வையிடலாம்.

ஓவியத்தில் அல்லது நூலில் தரப்பட்ட புதிய சூழ்நிலையில் பயிலுனர் தம்மைப்பொருத்திக் கற்பனையில் ஒரு காட்சியை உருவாக்கலாம். அல்லது ஒரு மெய்ப்பாட்டை வெளியிடலாம் [உள்ளத்து உணர்வுகளை புறக்குறிப்புகளால் மற்றவர்கள் உணர்ந்துகொள்ளும் தன்மையே மெய்ப்பாடு எனப்படும்) உ.ம்: பின்வரும் கதைப் பின்னல் நல்லதொரு கற்பனைக்கு இடம் தருகின்றது.

பாலத்தைமட்டும் அழைத்துக்கொண்டு வெளியேசென்றுவிட்டு வருவான் அவன் அத்தான். வீட்டில் தனியாகத் தங்கியிருக்கும் நாட்களில் சண்பகத்தின் மனதிலே சிறிது சிறிது ஏக்கமும் தாங்கலும் தோன்ற ஆரம்பித்தன அது முதல் அவள் அவர்கள் வெளியே போவதைத் தடுக்கமுயன்றாள்.

...''தினமும் போகாவிட்டால் என்ன? அவளும்வயது வந்த பெண், ஊரில்...

''படு பைத்தியம்போல் உளருதே நான் தோழிலே தட்டி வளர்த்த குழந்தையை நான் கூட்டிக் கொண்டு போனால், அதற்கு யார் தப்புக்கூறுவார்கள்'' என்றுஅவள் கணவன்...

கற்பனை இடம்பெறுகிறது. நடிகர் இச்சம்பவத்தைக் கற்பனை சிதையாது தனது நிலையில்வைத்துப் பார்க்கிறார். இப்படியொரு தர்மசங்கடமான நிலையில் தான்இருப்பதாகக் கதை புனைகிறார். இந்த ரகத்தில் இரு கற்பனைப் பாத்திரங்களை உருவாக்கிப் பாத்திரங்களுடன் சொல்லாடுகிறார்:

மற்றுமொரு உதாரணத்தைப் பார்ப்போம்: கொழும்பு கலாபவனத்தில் (Devil Dancers Daughter) என்ற மகுடத்தில் கன்னிப்பெண் ஒருத்தியின் கவர்ச்சிகரமான ஓவியம் இருக்கிறது அந்தக்கன்னியின் நிலையும் அவள் பார்வையில் தொனித்த மருட்கையும் அவளுக்குப் பயத்தை அளித்ததா? கோபத்தை அளித்ததா? பலர் பலமாதிரி விளக்கம் கொள்ளலாம். இரண்டு நிலையையும் நிச்சயமாகச் சொல்லமுடியாத உணர்ச்சியும் ஏற்படலாம். சிலர்பார்த்த உடனேயே அவள் முகத்தில் பரவி நின்ற அழகில் மயங்கலாம். சிலரின் உள்ளம் அவளைச் சுற்றியிருந்த ஆபத்தைப் பற்றியே தவிர அழகைப்பற்றி நினைக்கவும் மறுக்கும். ஒவ்வொருவரும் சுய அனுபவத்தைக் கொண்டு எப்படித்தாங்கள் காணப்பெறுவார்களோ அப்படித்தோற்றங்களைக் காண்பார்கள். நடிகரைப்பொறுத்தவரையில் படத்தைப் பார்த்தாலும் அதன் வழி ஏற்படும் அகக் கிளர்ச்சிக்கு அமையநடிப்பை வெளிப்படுத்தலாம்.

மேற்தரப்பட்ட அப்பியாசங்கள் கற்பனையைத் தீவிரப்படுத்த உதவுகின்றன. கற்பனை ஆக்கத்தை வளர்ப்பதற்கான மற்றுமொருவழி மனக்கண் வடிவங்களாகும். (Fantasy) நடிகன் நடிப்புக்கு வேண்டியதரவுகளைத் தன் அனுபவத்திலிருந்து பெறமுடியாத நிலையில் மனக்கண் வடிவங்களை நாடுகிறான் அதாவது தன் சுய அனுபவத்தோடு தொடர்புகொண்டு காட்சிகளை அமைக்க முடியாதுபோகும்பட்சத்தில்

ஈ. ஆர். திருச்செல்வம்

மனக்கண்வடிவங்கள் கைகொடுத்து உதவுகின்றன. (உ.ம்) வைசம்பாயன முனிவர் ஜனமேஜய மகாராஜனைப் பார்த்து ஹரிவம்சத்தைவிளக்கிய காட்சிகளில் ஒன்று வருமாறு!

''வேடர்களின் அரசனான ஏகல்வ்யன் பெரிய வில்லைத் தாங்கி, யமன்மேல் தோன்றி யாதவர்களின்மேல் பாணத்தைப்பொழிந்தான். ஸாத்யகி, பலராமர், உக்கிரசேனன் முதலிய வீரர்களைப் பாணத்தால் முறியடித்தான். யாதவசேனை சிதறுண்டு ஓடத் தலைப்பட்டது. பௌண்ட்ரக வாசுதேவன் தான் வெற்றிகண்டுவிட்டதாக எண்ணினான்...''

ஏகல்வ்யன் பாத்திரம் தாங்கி நடிக்க ஏற்பட்டால், நடிகனுக்குத் தன் சுய அனுபவங்கள் சில தரவுகளைத்தரலாம் ஆனால் ஏகல்வ்யனின் பழக்கவழக்கங்கள், போர்க்களத்தின் பெரும் காட்சி எல்லாம் சாதாரண அனுபவச் சுவடுகளிலில்லாதவை. இந்நிலையில் நடிகனுக்கு மனக்கண் வடிவங்கள் உதவுகின்றன.

நிகழ்வுக்கலைகளில் (Performing Arts) குறிப்பாக நாடக அரங்கில் மனக்கண் வடிவங்கள் முக்கிய இடத்தைப்பெறுகின்றன. பெரும் கற்பனைசார்ந்த காட்சிகளையும், கனவுகை நிலைகளையும்பூடகமான நிகழ்வுகளையும் வெளிப்படுத்துவதற்கு மனக்கண் வடிவங்கள் அச்சாணிபோன்றவை.

சில சொற்களைத் தந்து அவற்றை நாடகவடிவமாக்கிநடித்துக்காட்டும்படியும் பயிலுனரைக் கேட்கலாம் தயார் நிலைப்படுத்த பத்துநிமிடங்களை வரைவழங்கலாம். முழு ஊமத்தில் புதிதளிக்க பதினைந்துநிமிடங்கள்வரை தரலாம். பயிலுனர் மூன்று பேர்கொண்ட குழுக்களாகப் பிரிந்து இவ் அப்பியாசத்தைச் செய்யலாம் ஆனால், பயிலுனர் தனது தனியியல்பை இழந்துவிடக்கூடாது

நிகழ்வின் உண்மையையும் புனையுருக் காட்சியையும் பிரக்ஞைபூர்வமாக நம்புவது கற்பனைக்கு ஓர் முக்கியஸ்தானம். இந்த நம்பகத் தன்மையைக் 'குழந்தைகளின்விளையாட்டின்போது அவதானிக்கலாம் வீட்டில் குழந்தை 'பள்ளிக்கூடம் வைத்துவிளையாடும்' போது தானே ஆசிரியையாக மாறுகின்றது. பக்கத்திலுள்ள மரங்கள், பொம்மைகள் விளையாட்டுத் தோழர் மாணவராகவும் சுற்றுடல் வகுப்பறையாகவும் தோற்றமெடுக்கின்றது. காலநேரமும் இடமும் குழந்தைகளுக்குப் பிரச்னையாவதில்லை குழந்தைகள் எல்லையில்லாமல் புதிதளிக்கின்றன.

நடிகனும் கதாசிரியரின் கற்பனை அம்சத்தில் நம்பிக்கை கொண்டவனாக மாறினால் அதன் வழி நடிப்பு உண்மையாக அமையும். ஆனால் காலப்போக்கில் கல்வியும் அறிவும் எமது கற்பனையை மழுங்கச் செய்கின்றன. குழந்தை வளர வளரக் கற்பனைஉலகிலிருந்து விலகிச்செல்கின்றது. கனவுலகில் சஞ்சரியாமல் மனம் உண்மையை நாடவிளைகிறது.

நடிகன்குழந்தைகளைப்போல் தரப்பட்ட நிகழ்வுகளை உண்மை என்று அனுமானிக்கும் தன்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும் இந்த நம்பகத் தன்மை நடிகனுக்குத் தனது பார்வையாளர் மத்தியில் உண்மை நிலையை நடிப்பில் வெளிக்காட்ட உதவுகின்றது

நம்பகத்தன்மை கற்பனை என்ற பெருநோக்கிலும் கவனத்திலும் தங்கியுள்ளது. முனைப்பியல்பான உணர்ச்சி, மனக்காட்சி உருவங்கள், சுற்றுடல் இடமாற்றம் ஆகியன கற்பனையின் ரிஷிமூலங்களாகும். 'நான் ஆணித்தரமாகக் கற்பனை பண்ணுவதால் நான் நம்புகிறேன்' என்றும் கூறலாம். மேற்தரப்பட்ட அப்பியாசங்கள் எலலாம்கற்பனையை வளப்படுத்துவதற்கான வழிமுறைகளாகும். புனையுருக்காட்சியும், உணர்ச்சிகளும் ஆங்கிக்க அசைவுகளும் எவ்வளவு தீவிரமாக அமைகிறதோ அவ்வளவு தீவிரமாகக் கற்பனையும் அமையும். கற்பனை செறிவாக நம்பகத்தன்மை அல்லது மெய்மை காணுதலும் தானாக அமையும். (தொடரும்)

---

# ஜயந்தி

''வைசாக மாதச் சுடராகப் பௌத்த சிங்களராகிய நீவிர் புத்தபிரானை வழிபட்டு ஜயந்திகொண்டாடுவதுபோல இந்துக்களாகிய நாம் வைகாசி விசாகச் சுடராக முருகனை வழிபட்டு ஆனி, ஆடி மாதங்கள் முழுதாக ஜயந்தி கொண்டாடி கோவில்களிலே விழா எடுக்கிறோம்: புத்தபிரான் ஞான மெய்திய சித்திரா பௌர்ணமி நமக்கும் புனித தினமே. விசாகப்பெருமான் என்ற பெயர் நாமம் இருசாராரிடத்தும் வழக்கிலுண்டு. பக்தி கனிந்த உள்ளக்கமலங்களாக வெண்ணிற மலர்களை அர்ச்சிக்கிறோம். வைகாசிப் பூரணை நிலவில் முல்லைவளம்கொழித்த நந்திக்கடலரோம் கதிரமலை யாத்திரை ஆரம்பிக்கும் அடியார் கூட்டம் தங்கள் கரையோர மார்க்கத்தில் சித்தாண்டி முருகனையும் மண்டூர் கந்தனையும் வெருகல் சித்திர வேலாயுதரையும் உகந்தை முருகனையும் தரிசித்து ஆனந்திப்பர். ஆனி, ஆடி மாதங்களில் வடபகுதியில் பிரசித்தி பெற்ற முருகன் தலங்களான மாவிட்டபுரம், நல்லூர், செல்வச் சந்நிதி ஆகியன விழாக் கோலம் கொள்ளும். இந்துக்களின் இஷ்ட தெய்வங்களான விநாயகர் திருமால் பத்தினித் தெய்வம், கண்ணகியின் திருவடிவங்கள் பௌத்த தேவாலயங்களில் இடம்பெறுகின்றன. சித்திரைப் புத்தாண்டில் ஒன்றாகச் சந்திக்கிறோம். ஆடிவேல விழாவில் கதிர்காமச்சந்நிதியில் சிவனடியாதத்தில் ஒன்றாகச் சந்திக்கிறோம்...ஏன் சாக்கிய குமாரன் சித்தார்த்த புத்தனே ஓர் இந்துவாகத்தானிருந்தார்...''

''இந்தப் பூமியில் தோன்றிய உயிரினமனைத்துமே இங்கு ஜீவித்திருக்கத்தான் துடிக்கின்றன அல்லவா சிவா!''

''ஆகா அதிலென்ன சந்தேகம்! அதனால்தானே இப் பூமியை ஜீவ பூமி என்கிறோம்! ஒரு கதைகேள ஜயந்தி! எங்கேயோ ஓர் ஊரில் ஒரு நாடோடிக்குறவன் காட்டுமார்க்கமாக நடந்துபோய்க்கொண்டிருந்தான்; ஒரு கையிலே வழி நடையோடு எதுவோ ஒரு காட்டுச்செடியில் இடுங்கிய குச்சி, மறுகையிலே காணன் கோழி! அந்திப டும் சமய

அ. செ. மு.

மாகத்தன் குடிசை ஏகி அடுப்பு மூட்டி சமையல் ஆரம்பித்தான். கோழியை கழுத்து நெரித்துத்திருகி இறகு உரித்து அடுப்பில் காய்ந்த சட்டிக்குள் இட்டு அவித்தான்! கோழிக் கறி மசாலையுடனே பக்குவமாகச் சேர்ந்து திவ்யமணம் பரப்ப குறவனுக்கு நாவில் நீர் ஊறியது! வயிற்றுப்பசி அக்கினியாகமூண்டெழுந்தது. கையில் இன்னமும் விட்டெறிந்துவிடாமல் வைத்திருந்த காட்டுச் செடிக்குச்சியினால் ஒருக்கால் அடுப்புச்சட்டியில் கொதித்துக்கொண்டிருந்த கறியைக்கிளறித் துளாவினான்! அந்தமட்டில்கோழிஉயிர்துடித்தெழுந்து ஜிவ்வெனப் பறந்து கூச்சலிட்டு காட்டுக்குள்ளே ஓடி மறைந்தது! கறியும் மசாலையுமாகத் தளதளவெனச்சட்டியில வெந்துகொண்டிருந்த கோழி மாமிசம் இந்தவிதமாய் இறகு முளைத்து மாயமாகி ஓடி மறைந்ததையும் அடுப்பில் வைத்த கலம் வெறுமையாகிப் போய்க்கிடந்த விந்தையையும் கண்டு குறவன் திகைத்தான்.

இறைவன் இதுசம்பவத்துக்குப் பிறகு படைத்த அந்த அபூர்வ மூலிச்செடியை எண்ணினானோ அல்லது கோழியை எண்ணினானோ அவனது வாழ்நாளில் ஒருவேளைகூட பசி எடுக்காமலே விசர் பைத்தியம்பிடித்த மாதிரி நடந்துபோய்க்கொண்டேயிருந்தானாம் குறவன். இந்தப் பூமியிலே வாழும் சகல ஜீவராசிகளும் நமக்காகவே படைக்கப்பெற்றிருக்கின்றன என்றுதான் நாமெல்லோருமே நினைத்துக்கொள்கிறோம். இந்த எண்ணம் மமதை ஆகி ஆணவச் செருக்கு அங்கு தலை தூக்கியபோது... ஆட்டைக் கடித்துமாட்டைக்கடித்தஅதே மனக்குரூரம் சகோதர மனிதனையும் இலக்கிடுகிறது; ஒடுக்கி வைத்து அடக்கி ஆளவும் அடிமைப்படுத்தி துன்புறுத்தவும் முற்படுகிறது. எல்லை வரம்பறியாதொரு பேரண்ட வெளியில் நாம் வாழும் இந்த சுண்டக்காய் பூமி அது தோற்றியது முதலாக கிகிரி சுழன்று அவலப்பட்டுத் தொங்கிக்கொண்டு நிற்பது, இங்கு ஒட்டிக்கொண்டிருப்பனவும் அவ் வியல்புடைத்தாக நாளும் பொழுதும் ஒவ்வொரு நொடியும் கணமும் அலைமோதிக்கொண்டு அதுவே ஜீவ இயக்கமாக பரம்பொருள் ஆணையாக இயற்கை நியதியாகத்தோன்றி மறையும் இதில் வியப்பென்ன? விந்தையென்ன ஜயந்தி?

---

நாட்டுக்கூத்து, சமூக நாடகம், நகைச்சுவை நாடகம் என காலத்துக்குக் காலம் நாடகங்கள் மாறிவருகின்றன.

## ஒரு கண்ணோட்டம்

## புதுமைப்படைப்பு "மாப்பிள்ளை தேவை"

சமூக மாற்றத்துக்கேற்ப நாடகங்கள் அமையவேண்டும் என்பது ஒரு கட்டாயமும்கூட. இவ்வகையில் தற்காலத்து நாடக ரசிகர்களுக்கேற்றவகையில் இவையாவற்றையும்ஒன்றிணைத்து 'மாப்பிள்ளை தேவை'யை புதுமையாகத் தயாரித்திருக்கிறார் இயக்குநர் மாமணி நற்குணசேகரன்.

'மாப்பிள்ளை தேவை'என்று பத்திரிகையில் விளம்பரம் போடுகிறார் தந்தை அதைப் பார்த்துவிட்டு மூன்று மாதங்களின் பின்னர் வருகிறார் ஒரு பொறியியலாளன் (அருமை). அவருடைய சம்பளம் கார் பெற்றோலுக்கும் அவர் அருந்தும் மதுவுக்குமே காணாது என்பதை காரணம்காட்டி அடிக்காத குறையாகவெளியே துரத்திவிடுகிறார் தந்தை. பின்னர் தொடர்ந்து விவசாயி ஒருவர் ஓமானில் தொழில்புரிபவர் ஒருவர், நாடகக் கலைஞன் என்பவர் பெண்கேட்டுவருகின்றனர், கடைசியாக வரும் சங்கக்கடை மனேஜருக்கே அவரது மகள் ருக்மணியைத் திருமணம் செய்துவைக்கிறார்- திருமணம் முடிந்து ஒருமாதமாகியும் வேலைக்குப் போகாததால் மருமகனை அழைத்து விசாரிக்கும் மாமா அப்போதுதான் அவர்கள் இருவரும் பழைய காதலர்களென்பதும் இருவரும் ஆலோசித்துத்தான் வேலைசெய்வதாக பொய் கூறியதாக அறிந்ததும் தந்தை அறிவிழந்து விழுகிறார், இத்துடன் கதைமுடிகிறது.

நாடகத்தின் முழுநேரமும் ஒன்றரை மணித்தியாலங்கள் சகல கட்டங்களிலும் தந்தையாக நடித்த இன்பராசா அதிக பங்கெடுத்துக்கொண்டார். குணசித்திரமான நடிப்பாலும் மாறுபட்ட முகபாவங்களாலும் பார்வையாளர் மத்தியில் நல்ல பாராட்டைப்பெற்றார் அவர். எதிர் காலத்தில் ஒரு நல்ல பங்களிப்பை இவர் நாடக உலகுக்கு அளிப்பார் என்பதில் சந்தேகமில்லை.

ஈழத் தமிழ் நாடகஉலகில் பெண் நடிகைகள் முன்வருவது மிகமிகக் குறைவு. அதுவும் வடபகுதியைப்பொறுத்தவரை விரல்விட்டு எண்ணிவிடலாம் தந்தையின் நடிப்புக்கு ஈடு செய்து சிலகட்டங்களில் தந்தையையே மிஞ்சிவிட்டார் மகள் ருக்குமணியாக நடித்த ஜெயவசந்தினி. தான் ஒரு சிறந்த நடிகை என்பதை மாத்திரமல்ல ஒரு நல்ல பாடகி என்பதையும் குரல் இனிமையால் உணர்த்தினார்.

வாகினி ஸ்டுடியோவில் தமிழக முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் ஆதரவில் கலைப்பயிற்சிபெற்ற அருமைநாயகம் முதலில் பொறியியலாளராகவும் இறுதியில் சங்கக்கடை மனேஜராகவும் இரு பாத்திரங்களில் நடித்தார். அவரது கலை அனுபவத்துக்கேற்வ ஒரு நடிப்பைக் காட்டத் தவறிவிட்டபோதிலும் நன்றாக நடித்தார்.

நாடகக் கலைஞன் (சின்னத்துரை) விவசாயி (ஞானம்) பாத்திரமேற்றவர்களுக்கும் நல்ல எதிர்காலமுண்டு. ஓமான் தொழிலாளியின் பாத்திரமும் சிறப்பாகஇருந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். கதை வசனம் பாடல்களை

(9-ம் பக்கம் பார்க்க)

# அன்புத்தோழன்

- சி. வி. குணசேகரம் -

[22]

வானத்தில் பறந்துகொண்டிருந்த குதிரையை விக்கிரமன் வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றபோது அவனருகில்வந்த மகேந்திரபுரி மன்னன் "என்ன விக்கிரமா? குதிரை பறக்கிறதே என்று அதிசயப்படுகிறாயா...?' என்றார். "ஆம் மன்னா குதிரைபறக்குமென்று நான் கேள்விப்பட்டது கூட இல்லை... இது யாரின் குதிரை...'

'அது என்னுடைய குதிரைதான் விக்கிரமா... பலகாலம் தவமிருந்து திருமாலிடம் பெற்றேன்...' என்றான் மகேந்திரபுர மன்னன் நந்திவர்மன்.

இருவரும் குதிரையைப்பற்றிக் கதைத்தவாறு அரண்மனையுள் சென்றனர் விருந்தினர் மண்டபத்தில் அறுசுவை உணவுகள் காத்திருந்தன. விக்கிரமனும் சேதுபதியும் பல நாட்களுக்குப்பின் சுவையான உணவுகளை உண்டனர். சாப்பிட்டு முடிந்ததும் சேதுபதி மணிக்கொடியோடு நந்தவனத்தில் பந்தடித்து விளையாடியது. விக்கிரமனும் நந்திவர்மனும் கொலு மண்டபத்திலிருந்து அளவளாவிக்கொண்டிருந்தனர்.

"கொள்ளிக்காடன் விஜயபுரிக்குச்செய்தகொடுமைகளைக் கேள்விப்பட்டேன். அவன் விஜயபுரியை மட்டுமல்ல வேறு பல நாடுகளையும் நாசம்செய்துள்ளான். அவனுடைய வெறிக்கு இலக்கான மன்னர்கள் எண்ணில் அடங்கார். என்று அவன் ஒழிகிறானோ அன்றுதான் மன்னருக்கும் மக்களுக்கும் சுபதினம்... நான் மீண்டும் என் குலக்கொழுந்தைக் காண்பேன் எனக் கனவுகூடக் காணவில்லை. அவளுக்குஉயிர்ப்பிச்சை அளித்த நீயே அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்., என்றான் நந்திவர்மன்.

'மன்னா, நானே கொள்ளிக்காடனைக்கொன்று எனது கையை மீட்கச்செல்கிறேன். சில சமயங்களில் நான் கொள்ளிக்காடனுக்கு இரையாகவும் கூடும். என் இலட்சியத்தில் வென்றெடுத்தபின்னரே வேறு எதைப்பற்றியும்சிந்திப்பேன்'

மன்னன் நந்திவர்மன் சில கணங்கள் யோசித்தார். பி... நீ சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. உனது இலட்சியமநிறைவேறியபின்பு அதைப் பற்றிக் கதைப்போம்... நீ செய்த இந்த உதவிக்காக என் உயிரையேகொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்? உனக்குத் தேவையான எந்த உதவியையும் என்னிடம் தயங்காமல் கேட்கலாம் என்றான் நந்திவர்மன்.

'அரசே பின்பு மறுக்கக் கூடாது...'

'நான் கொடுத்தவாக்கை என்றுமே மீறியதில்லை தயங்காமல் கேள்'

"உங்களிடம் இருக்கும் பறக்கும் குதிரையை எனக்கு சில நாட்களுக்கு இரவலாகத்தந்துவுவீர்களா?'

'தாராளமாக எடுத்துக்கொள் ஆனால் அதில் என்னைத் தவிர வேறு எவரும் சவாரி செய்யமுடியாது. அதனருகில் சென்றாலே காலால் உதைக்கும்.'

''பரவாயில்லை நான் முயற்சித்துப்பார்க்கிறேன்'' என்றான் விக்கிரமன்.


நந்திவர்மன் விக்கிரமனை குதிரை லயத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே நின்ற பறக்கும் குதிரையான மதன கல்யாணி விக்கிரமனைக்கண்டதும் ஆவேசமாக அவனைத்

[9ம் பக்கம் பார்க்க]

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## லண்டனில்நடைபெற்ற தமிழ்த் திருமணம்



முழுக்கவும் தமிழ் முறையிலான திருமணமொன்று அண்மையில் லண்டன பாரதிய வித்தியாபவனில் இடம்பெற்றது.


மணமகள் இலங்கையைச் சேர்ந்த சந்திரா மயில்வாகனம். யாழ். இந்துக் கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியர் திரு. கே. வி. மயில்வாகனம் தம்பதிகளின் புத்திரியாவார் இவர். திரு. மயில்வாகனம் குடும்பத்தினர்இப்பொழுது ஆங்கிலாந்தில் ஹெடிங்டன் நகரில் இருந்துவருகின்றனர்.

மணமகன் திரு. கந்தர் ஜான் ஜேர்மனியில் வீஸ்பேடன் பல்கலைக்கழகத்தில் சட்ட ஆலோசகரா இருந்துவருகிறார். மாப்பிள்ளைத் தோழனாக மணமகளின் சகோதரர் மனோகரன் மயில்வாகனம் விளங்கினார். இத்திருமணத்தில் கலந்து கொள்வதற்காக அவர் இலங்கையிலிருந்து சென்றார்

மணமகள் 1964-ம் ஆண்டு லண்டன் சென்று அங்கு லிட்டில் மோர் ஆஸ்பத்திரி தாதியாகப் பயிற்சிபெற்றார். பின்னர் 1969-ம் ஆண்டு தொடக்கம் ஜேர்மனியில் ஓர் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் மணமகனைச் சந்தித்தார். அவரது மூத்த சகோதரர் பட் மயில்வாகனம் ஒக்ஸ்போர்ட்டில் பிரபலமான ஆசிரியராகவும் விளையாட்டு வீரராகவும் இருந்துவருகிறார். அவரது மூத்த சகோதரி ராதா பேரின்பநாயகமும் அவரது 3 குழந்தைகளும் இங்கிலாந்திலிருந்து வருகிறார்கள். அங்கு அவர் ஒக்ஸ்பம் நிறுவனத்தின் நிதிப்பிரிவில் ஓர் உதவி அதிகாரியாகபணிபுரிந்துவருகிறார். அவரது கணவர் டாக்டர் ஜி. ரி. பேரின்பநாயகம் ஆஸ்திரேலியாவில் டார்வின் பகுதி ஆஸ்திரேலியமொழியியல் கல்லூரியில் பணிபுரிகின்றார்.

லண்டன் பாரதிய வித்யா பவன் பதிவாளர் திரு. எம். கிருஷ்ணமூர்த்தி திருமணச் சடங்கை நடத்திவைத்தார். பிராமண குலத்தவரான இவர் ஒரு கல்விமான் திருமணச் சடங்குபற்றி அவர் அங்கு ஆங்கிலத்தில் சிறப்பான ஒருவிளக்கம் கொடுத்தார், திருமணத்திற்கு ஏராளமானவர்கள் வருகை தந்திருந்தனர்,

படம 1: புதுமணமக்களுடன் மணமகளின் தந்தை திரு. மயில்வாகனமும வைபவத்தை நடத்திய திரு. கிருஷ்ணமூர்த்தியும காணப்படுகின்றனர்,



படம 2: திருமதி மயில்வாகனம, திரு கிருஷ்ணமூர்த்தி மணமக்களும நண்பர்களும

## மாணவருக்கு உற்சாகமும் மனவலிமையும் அவசியம்

ஆசிரியை: திருமதி கோகிலா மகேந்திரன்

செவ்வி: செல்வி ச. ரதிமலர்

(கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்)

கே: ஆசிரியத்தொழில்உங்களுக்கு நிறைவு தருகிறதா?

ப; நிச்சயமாக ஒரு மாணவன் நான் சொல்லித்தரும் கணக்கைச் செய்து சரிவாங்கி மகிழும் கணத்திலிருந்து அவன் சிறந்த பிரஜையாகிச் சமூகத்தில் நன்றாக வாழுவதைப் பார்க்கும்வரை நிறைவு இருக்கிறது. வேறு எத்தொழிலும் இதுபோன்ற மகிழ்ச்சியைத் தரமுடியாது.

கே: எங்கள் பாடசாலையில் எங்களைக் கவர்ந்த ஆசிரியராக நீங்கள் இருப்பதுபோல் உங்கள் மாணவ வாழ்க்கையில் உங்களைக் கவர்ந்த ஆசிரியர் யார்?

ப: எனது ஆசிரியர்களில் தற்போது மகாஜனக் கல்லூரி அதிபராக இருக்கும் திரு கனகசபாபதி என்னைமிகவும்கவர்ந்த ஆசிரியர். அவரது கற்பிக்கும் திறன், பாடநேரத்தில் ஒரு நிமிடத்தைக்கூட தவறவிடாத ஒழுங்கு, எளிமை கடமைக்கு அவர் தரும் முக்கியத்துவம். இவை எனக்குப் பிடிக்கும்.

கே: எங்கள் கணித ஆசிரியையாக இருக்கும் உங்களுக்கு படிக்கும் காலத்தில் விருப்பமான பாடம் எது?

ப: க. பொ. த. (சாதாரண) வரையில் எனக்கு பிடித்தமான பாடமதூயகணிதம்தான் உயர் வகுப்பில் எனக்குப் பிடித்தமான பாடம் இரசாயனம்.

கே;- மாணவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

ப: பொதுவாக எதிலும் உற்சாகம் உடையவர்களாகவும, எடுத்துக்கொண்ட வேலையை நிறைவுறச் செய்ய வேண்டும என்ற ஆர்வமுடையவர்களாகவும், எந்தப் பிரச்சினையிலும் இறுதிவரை போராடும் மனவலிவு உடையவர்களாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். [உம்மிடம் உற்சாகமும் ஆர்வமும் உண்டு. ஆனால் மனவலிமை இல்லை என்று என்னைப்பார்த்துக் கூறுகிறார்].

ஆசிரியர்-மாணவர் சந்திப்பு

கே: உங்கள் இலட்சியம் என்ன?

ப: 'மகன் தந்தைக்காற்றும உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்' என்று படித்திருப்பீர் அதேபோல்தான், இவளை மனைவியாக அடைய இவன் என்ன தவம் செய்தானோ' என்று என் கணவரை ஊரார் அனைவரும் பார்த்து வியக்கும்படி நல்ல பண்புகள் திறமைகள் பெற்று எப்போதும் மன நிறைவுடன் வாழ வேண்டும் என்பதே எனது இலட்சியம்.

[9-ம்பக்கம் பார்க்க]

வெஸ்லி
(வாணிப்பாம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி
மூன்றுமுடிச்சு

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 3-45
ரவிச்சந்திரன்-விஜயா
ஜானகிசபதம்

RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Killers are Challenged
(Also news-visit of Indian Prime Minister)

## இலக்கிய...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

குக் கஷ்டமில்லை.

பொதுவாக நோக்கின் இக் கதைகள் ஈழத்தில் தோன்றிய சிறந்த இலக்கிய சிருஷ்டி என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். கதைப்போக்கு பாத்திர வார்ப்பு, உரையாடல், வர்ணனை யாவும் குறைவற விளங்கும் கதைகளைக்கொண்ட இச்சிறுகதைத் தொகுதி இலக்கிய ரசிகர்கள் இல்லங்களை அலங்கரிக்க வேண்டியதொரு நூலாகும்.

-திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கம்

தமிழ்துறை,
யாழ். வளாகம்

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி
[புதிய பிரதி]

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

10-வது வாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி
(யாழ். நகர்)
தினசரி ...
முத்துராமன்-பிரமிளா
ஜெய்சித்ரா-ராகவன்
வாழையடிவாழை

ஸ்ரீதர்
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 6-15 & 9-45
சிவாஜி-வரலட்சுமி
நான் பெற்ற செல்வம்

REGAL
(Jaffna)
NOW SHOWING
Daily at 4-30, 7-00 & 9-30
ANNA CALDER in
Wuthering Heights
(Color-Adults)

Shanthi
(Jaffna Phone- 7642)
4Th AND FINAL WEEK!
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
More Suitable for Adults — Eastman Color
SEVEN NIGHTS IN JAPAN
Only For Another
SEVEN DAYS IN JAFFNA
Absolutely your last chance to see this simply and tenderly told Love Story of A Visiting Prince Charming for A Tour Guide of A Japanese Girl.
School-Please contact the Management for Special Arrangements

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-00, 6-00 & 9-30
சனி, ஞாயிறு: 10-00, 3-00
6-00 & 9-30
கமலஹாசன் — சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை
(புதியபிரதி)

லிடோ
போன்: 1636
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - ...
(யாழ்நகர்)
ஆசை அறுபது நாள்

## அன்புத்...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

தாக்கவந்தது. விக்கிரமன்பின் புறமாக நகர்ந்து தாவி அதன் முதுகில் ஏறினன். வானில் பறந்த மதனகல்யாணி தன் முழுப்பலத்தையும் உபயோகித்து விக்கிரமனை நிலத்தில் வீழ்த்த முயற்சித்தது. விக்கிரமன் அதன் பிடரி மயிரை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டான். மதனகல்யாணியால் விக்கிரமனை நிலத்தில் வீழ்த்த முடியவில்லை நெடுநேரம் போராடிக் களைத்ததால் விக்கிரமனுக்குப் பணிந்தது.

மதனகல்யாணியின் செருக்கை அடக்கி வானில் பறந்த விக்கிரமனின் வீரத்தை நினைத்து நந்திவர்மன் மகிழ்ந்தான்.

வானில்பறந்த மதனகல்யாணியை நிலத்தில் இறக்கினன் விக்கிரமன்.

''விக்கிரமா திருமால் இக் குதிரையைத் தரும்போது, 'நந்திவர்மா உன்னைத்தவிர மதனகல்யாணியை யாராலும் அடக்கி வானில் பறக்கமுடியாது. அதைமீறி யாராவது ஒருவன் அடக்கிப்பறந்தானேயானல் அவன் மகாபராக்கிரமசாலியாக இருப்பான்' என்ருர். எனவே உன்னல் கொள்ளிக்காடனை வெல்லமுடியும் சென்றுவா' என்ருர் நந்தவர்மன்.

விக்கிரமன் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டுமதனகல்யாணியில் ஏறினன். சேதுபதியும் விக்கிரமனின் பின்னல் ஏறி அமர்ந்துகொண்டது மதனகல்யாணி வானேக்கிக் கிளம்பியது

வானில்பறப்பது சேதுபதிக்கு குசியாக இருந்தது. மகிழ்ச்சி மிகுதியால் மதனகல்யாணியின் பின்பகத்திலிருந்து முன்பகம்செல்ல நினைத்து தாவியது. அதன் இலக்குத் தவறிவிட்டது. மறுகணம் அது பூமியைநோக்கி சுழன்று சுழன்று சென்றுகொண்டிருந்தது. அதைவிக்கிரமன் கவனிக்கவில்லை.

[அடுத்த எண்ணைத்தில்]

## கள் இறக்கும் தொழிலாளர் புதிய சங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள கள்ளிறக்கும் தொழிலாளர்களின் கஷ்டங்களையும், கூட்டுறவு இயக்கத்திலுள்ள நிர்வாகிகள் சிலரின் நடவடிக்கைகளையும், சில ஊழியர்களின் சுரண்டல்களையும் எதிர்த்துப் போராடி, நீதியை நிலைநாட்டுவதற்காகவே, வட-இலங்கைக் கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.''

புலோலியில் நடந்த வட இலங்கைக் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பொதுச்செயலாளராக தெரிவு செய்யப்பட்ட திரு. பொன் குமாரசாமி மேற்கண்டவாறு கூறினர்.

முன்னுள் நியமன எம். பி. திரு. சி. சிவசுப்பிரமணியம், ''கள்ளிறக்கும் தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாகத் திரளவேண்டும்'' என்ருர். கள்ளிறக்கும் தொழிலாளர்களின் நியாயமான உழைப்பைச் சில நிர்வாகிகள் அங்கீகரிக்க மறுப்பதுடன் தமக்குத் தேவையானவர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்படுவதை நிறுத்துவதற்குப் போராட்டம் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினர்.

## கள் தவறணைகள் தோறும் விழிப்புக்குழு நியமனம்

[உடுப்பிட்டி]

சீவல் தொழிலாளர்கள் சட்டவிரோதமாகக் கள்ளிறக்குதல், அந்தாட்சியின்றி மரம் சீவுதல் ஆகியவற்றில் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து கட்டைவேலி-உடுப்பிட்டி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், திடீர் விழிப்புக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

இப்பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழியங்கும் 19 கள்ளுத் தவறணைகளிலும் திடீர் கண்காணிப்பை மேற்கொள்வதில் இவ்விழிப்புக்குழு ஈடுபடும்.

தவறணைகள் ஒவ்வொன்றுக்கும் ஐந்துபேர் வீதம் 95 விழிப்புக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். [ச]

## வாகரவத்தையிலிருந்து புதிய பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் வாகரவத்தையிலிருந்து சாவகச்சேரி, யாழ்ப்பாணத்திற்குப் புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக இப்பகுதிக்கு பஸ்சேவையை நடத்துமாறு கோப்பாய் எம். பி. அரசை வற்புறுத்தியதைத் தொடர்ந்து இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிய பஸ் சேவை காலை 6 மணி முதல் 7 மணி வரை நடைபெறும். இச்சேவையால் அப்பகுதி விவசாயிகள் தமது விளைபொருட்களைச் சாவகச்சேரிச் சந்தைக்குச் சுலபமாக எடுத்துச்செல்ல வாய்ப்பேற்பட்டுள்ளது.

சேவையைக் கோப்பாய் எம். பி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார். யாழ். டிப்போ கட்டுப்பாட்டாளர் திரு. கே. நாகரத்தினமும், உதவி அத்தியட்சகர் திரு. எஸ் சொக்கலிங்கமும் வைபவத்தில் கலந்துகொண்டனர். [கெ-க]

## திருடப்பட்ட பொருட்கள்

[கோண்டாவில்]

ஆலயமொன்றிலிருந்து திருடப்பட்ட 250 ரூபா பெறுமதியான பொருட்கள், மறுநாளே கோவில் வளவுக்குள் கிடக்கக் காணப்பட்டன.

கோண்டாவில் கிழக்கு, அருள்மிகு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான பொருட்கள் திருட்டுப்போனதை மறுநாட்காலை அர்ச்சகர் அறிந்ததும் பொலிஸில் புகார்செய்ததாகவும், இதுபற்றிப் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில், மறுநாள் திருட்டுப்போன பொருட்கள் கோவில் வளவிற்குள் வீசப்பட்டுக் கிடந்ததாகவும் கூறப்படுகிறது. (ச)

## மாணவருக்கு...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

கே: பெண்கள் உயர் கல்வி கற்றல், உத்தியோகம் பார்த்தல் இவற்றினல் குடும்பத்தில் பிரச்னைகள் ஏற்படாதா?

ப: பெண்ணின் உயர்கல்வி அவளைச் சிறந்த நிர்வாகத் திறமையுள்ளவளாக மாற்றி விடுவதால் அவளின் குடும்பம் இனிமையாய் இருக்கும். திருமணம் முடிந்தபிறகு அவள் தனியாக வீட்டைக்கவனிக்க வேண்டியிருந்தால்- கணவரும் விரும்பாவிட்டால் உத்தியோகம் விடலாம். என்னைப் பொறுத்தவரை வீட்டில் அம்மா இருப்பதாலும் என் கணவர் நான் ஆசிரியையாக இருப்பதை விரும்புவதாலும நான் வேலைசெய்கிறேன்

கே: உங்களுக்கு இலக்கியத் துறையில் ஆர்வமிருப்பதை அறிவேன். நீங்கள் எழுதிய கதை, கவிதைகளில் உங்களுக்கு விருப்பமானது எது?

ப: மனிதன் வளர்ந்துகொண்டிருக்கிறன் சமுதாயம் மாறிக்கொண்டிருக்கிறது. சிந்தனைகள் மாற்றம் பெறுகின்றன. இந்தவகையில் நான் நேற்று எழுதியவை இன்று எனக்குப் பிடிப்பதில்லை. இன்று எழுதுபவை நாளை பிடிக்காது போகலாம். நான் நேற்று முன்தினம் எழுதி இதுவரை பிரசுரத்திற்கோ, ஒலிபரப்பிற்கோ அனுப்பாமல் இருக்கும். 'மனித சொரூபங்கள்' சிறுகதைதான் சிறந்ததாக இப்போது நினைக்கிறேன். இதைவிடச் சிறந்த கரு ஒன்று நாளை மனதில் உதயமானுல் இது அடிபட்டுப்போகும்.

கே: எங்கள் பாடசாலைக்கு நீங்கள் வந்து 3 வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் நீங்கள் மிகவும் ரசித்த நிகழ்ச்சி எது?

ப; உங்கள் வகுப்பு மாணவன் பிரேம் குமாரை நான் ஏசினல் அல்லது தண்டித்தால்...'ரீச்சரோடை நான் கோபம்...இனி இல சோக் எடுத்துவரச் சொல்லி யாரிட்டைச் சொல்லுவ பாப்பம்... நான் கடைசிவரையும் கதைக்கமாட்டன்...கோவக்காரி ஏன் என்னுடைய கொப்பியைப் பாக்கிறு...' என்று மிகச் சிறு குழந்தைபோல் வெள்ளைமனதுடன் அவன் கதைப்பதும், அடுத்த சில நிமிடங்களில் தன் கோபத்தை மறந்துவிட்டு என்னுடன் கதைப்பதும் நான் ரசித்த நிகழ்ச்சி. எப்போதும் ரசிக்கும் நிகழ்ச்சி.

(ஆசிரியைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.)

## புதுமைப்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

எழுதிய அருமை இடையிடையே தென்னிந்தியத் திரைப்படப்பாடல்களை சேர்க்காமல் அவற்றிற்குப் பதிலாக பாடல்களை தானே எழுதியிருந்தால் நன்ருக இருந்திருக்கும் நல்ல இனிமையான குரலுடன் பின்னணி பாடிய திருமதி கமலலோஜினி பரமசிவத்தின் குரலை ஆர்மோனியம் அவ்வப்போது ஆக்கிரமித்துக்கொண்ட...

87 நாடகங்களை நெறிப்படுத்திய அனுபவசாலியான திரு. நற்குணசேகரனுக்கு இந் நாடகம் மேலும் ஒரு வெற்றி வயன்று சொல்லலாம்' இன்னும் சற்று மெருகேற்றியிருக்கலாம்.

'மாப்பிள்ளை தேவை' என்ற இந்த நாடகத்தின்மூலம் தமிழ் நாடக உலகிற்கு ஒரு நல்ல பங்களிப்பை சகாயர் நாடகாலயம் செய்துள்ளது எனலாம்.

-எஸ் குகநாதன்

## நோர்வூட்டில் கலைவிழா

[கொழும்பு]

நோர்வூட் ஸ்ரீசுப்பிரமணிய தேவஸ்தான கலியாண மண்டபத்தில் முத்தமிழ்விழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை வள்ளுவர் மாமன்றம், கொழும்பு தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) வேலி வெளியீட்டக நண்பர் கழகம் என்பன ஒன்றிணைந்து செய்துள்ளனர்.

11ம் திகதி மாலை நடைபெறும் விழாவில் 'தமிழ் இலக்கியம் நேற்று-இன்று-நாளை' என்னும் பொருள்பற்றி திருவாளர்கள் வ இராசையா, என் திருச்செந்தூரன், இரா. சிவலிங்கம் ஆகியோர் சொற்பெருக்காற்றுவார்கள்

(கு-இ)

# ஜன்னல் பிரித்துகொள்ளை:
## எதிரிகளுக்கு சிறைத்தண்டனை

[பண்டத்தரிப்பு]

வீடொன்றில் யன்னலைப் பிரித்து உட்புகுந்து அங்கிருந்த நகைகளையும், ரொக்கப்பணத்தையும் திருடிச் சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கில் முதலாவது எதிரியான தலவாக்கொல்லையைச்சேர்ந்த 17 வயது இளைஞனுக்கு ஐந்துவருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும், இரண்டாவது எதிரியான காரம்பனைச்சேர்ந்த வாலிபருக்கு ஒன்றரைவருட கடூழிய சிறைத்தண்டனையும் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி விதித்து தீர்ப்பு வழங்கினார்.

மாவிட்டபுரத்திலுள்ள வீடொன்றில் புகுந்து நகைகளையும்ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்ததாக காங்கேசன்துறைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்ட, பிரஸ்தாப வீட்டில் ஏற்கனவே வேலைக்காரனாக இருந்ததாகக் கூறப்படும் தலவாக்கொல்லை வாசியான செல்வரத்தினம் என்னும் 17 வயது இளைஞனையும், இத்திருட்டுக்கு உடந்தையாக இருந்தவரெனக் கருதப்படும் காரம்பன் வாசியான திருநாவுக்கரசு என்னும் வாலிபனையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது, முதலாவதுஎதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. மு. திருநாவுக்கரசு,முதலாவது எதிரி விரைவில் குடியுரிமை பெற்று இந்தியாவுக்குச் செல்லவிருப்பதாகவும் அதற்கான பாஸ்போட் உட்பட சகல பத்திரங்களும் எடுத்திருப்பதாகவும் தெரிவித்து நீதிபதியிடம் சமர்ப்பித்தார். இதைப் பார்வையிட்ட நீதிபதி முதலாவது எதிரியைக் கடுமையாகஎச்சரித்து நீ விரைவில் இந்தியாவுக்குப்போக விருப்பதை உமது சட்டத்தரணி எடுத்துக்காட்டியதினால் உனக்கு வழங்கப்படவேண்டிய தண்டனையை வழங்கமுடியாதிருக்கிறேன் என்று குறிப்பிட்டு 5 வருடங்களுக்குஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையைவிதித்து தீர்ப்பளித்தார் இரண்டாம் எதிரிக்குஒன்றரை வருட கடூழியச்சிறைத்தண்டனை விதித்தார்.

## இன்று

[யாழ்ப்பாணம்]

வலதுகுறைந்த மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்திற்கென யாழ்.மாவட்டத்தில் 'செஷயர் இல்லம்' அமைப்பதுபற்றிய கருத்தரங்கொன்று இன்று நல்லூர் யாழ். இன்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கை யாழ். லயன்ஸ் கழகம் நடாத்துகின்றது.

கருத்தரங்கில் சமூகசேவைப் பகுதி உதவி ஆணையாளர் திரு. கே. கங்காதரன், யாழ். லயன்ஸ் கழகத்தலைவர் திரு. எஸ் இராஜேந்திரா, யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு. ஏ. கதிர்காமர், இந்து இளம் வாலிபர் சங்க செயலாளர் திரு.எஸ்.முத்திலிங்கம், திரு எம்.தனிநாயகம், திரு. கே. நேசையா உட்பட பலர் உரையாற்றுவர் [கெ]

ஃ ஃ ஃ

[யாழ்ப்பாணம்]

தமிழ் இளைஞர்பேரவை நல்லூர்த் தொகுதியின் பொதுச்சபைக் கூட்டமும் கருத்தரங்கமும் இன்று மாலை வண்ணார் பண்ணையில் காங்கேசன்துறை வீதியில் நடைபெறும். இக்கூட்டத்தில் தமிழ் இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் திரு த சந்ததியார் மற்றும் இளைஞர்பேரவைதொகுதி அமைப்பாளர்கள் கருத்துரை வழங்குவர்.

இளைஞர்பேரவையின் காங்கேசன்துறைத் தொகுதி பொதுக்கூட்டமும் கருத்தரங்கமும் நாளை நடைபெறுகிறது.

0 0 0

## ஆசிரியர்களின் ஞானொடுக்கம்

[சாவகச்சேரி]

ஆசிரியர்களுக்கான ஞானொடுக்கமொன்று இன்று காலை மிருசுவில் றோ. க. வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

ஞானொடுக்கத்தை வண. பிதா யேசுதாசன் அடிகளார் நடாத்தவிருக்கின்றார்.

இதற்கான ஏற்பாடுகளை மிருசுவில் பங்குகட்டளைக்குரவர் வண பிதா பற்றிக்ஞானப்பிரகாசம் அடிகளார் செய்துள்ளார். [க]

## மிருதங்க தாளவாத்திய கச்சேரி

நாச்சிமார் கோயிலடி சங்கீதரத்தினம் அ. ரகுநாதனின் மிருதங்க தாளவாத்திய கச்சேரியை இன்று இரவு 10 - 15 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் கேட்கலாம் இவருடன் திரு. ரி. ஜெயசுந்தரம்கஞ்சிராவும் கே. கே. அச்சுதன் கடமும் வாசிப்பார்கள் சங்கிதவித்துவான் ரி.வி பிச்சையப்பா பல்லவி வாசிப்பார்

## ஜனாதிபதிக்கு விருந்து

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சமஸ்தலங்கா ஆயுர்வேத வைத்தியர்கள் சங்கத்தினர், ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு விருந்துபசாரம் ஒன்றை நடாத்ததீர்மானித்துள்ளனர். இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வடஇலங்கை சித்த மருத்துவர் சம்மேளனத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என அதன் செயலாளர் வைத்திய சிரோமணி எம் எஸ் சுந்தரம் தெரிவித்தார்

ஜனாதிபதிக்கு அளிக்கப்படும் இவ்விருந்து வைபவத்தில், தமது சம்மேளனத்தின் சார்பில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்து முறையே ஒவ்வொருவரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து மூன்று அல்லது நான்கு பிரதிநிதிகளுமாக கலந்து கொள்ள இருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## இந்த மாணவர்களின் சாதனை

[உடுப்பிட்டி]

ஜி. சி. ஈ. [சாதாரண]தர பரீட்சையில் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியைச் சேர்ந்த இரு மாணவர்கள் ஏழு விசேட சித்தியும் ஒரு திறமைச் சித்தியும் பெற்றுச் சாதனைபுரிந்துள்ளார்கள்.

ஏ கேதீஸ்வரன், எஸ். விக்டர்ஜேம்ஸ் ஞானராசா ஆகிய இரு மாணவர்களுமே இப்பரீட்சையில் இச்சாதனையைப் பெற்றுள்ளனர்.

இவ்விரு மாணவர்களுக்கும் கல்லூரி அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் பாராட்டுத்தெரிவித்து வாழ்த்தியுள்ளார்.

## கூட்டணி...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆமோதித்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தமிழ் இளைஞர் பேரவையின் யாப்பை பூர்த்தியாக்கி இளைஞர் பேரவை பொதுச்சபைக்கு முதலில் சமர்ப்பித்து அங்கீகரித்தபின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபையின் அங்கீகாரத்துக்கு அனுப்புவதென்றும் தீர்மானித்து யாப்பைத் தயாரிப்பதற்கு அனுப்புவதென்றும் 10 பேர் கொண்ட உபகுழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

உப குழுவின் தலைவர்களாக திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர், மற்றும் திரு. கனகமனோகரன் [யாழ்ப்பாணம்) திரு. எஸ், சிறிஸ்கந்த்ராஜா [திருமலை], திரு. வண்ணை ஆனந்தன் [நல்லூர்) திரு, மண்டூர் மகேந்திரன் [கொழும்பு[ திரு. எஸ், தெய்வேந்திரன் [முல்லைத்தீவு[ திரு எம்,மதுரநாயகம்(பட்டிருப்பு) திரு என், ஈ, தேவராஜா [வவுனியா[ திரு. எல்மோ சிங்கராஜர் (மன்னார்) ஆகியோரும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்,

### அமிர் அமைப்பாளர்

இளைஞர் பேரவை அமைப்பாளராக இயங்குவதற்கும் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதற்கும் இளைஞர் பேரவை பொதுச்சபை திரு. அமிர்தலிங்கத்திற்குப் பூரண அதிகாரத்தை அளித்துள்ளது. இதைவிட இளைஞர் பேரவையின் சார்பில் பத்திரிகைகளுக்கு அறிக்கைவிடுவதற்கு வேறு எவருக்கும் அதிகாரமில்லையென்றும் பொதுச்சபை தீர்மானித்துள்ளது,

### நடவடிக்கை ரத்து

29-10-78-ல் நிறைவேற்றப்பட்ட தமிழ் இளைஞர் பேரவை தற்காலிக பொதுச்சபையின் தீர்மானத்திற்கு அமைய, ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்ட பொதுச்சபை, செயற்குழு உறுப்பினர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டு, அவர்கள் அனைவரும் தொடர்ந்து பொதுச்சபை உறுப்பினர்களாகவும், செயற்குழு உறுப்பினர்களாகவும் இருக்கமுடியுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [கெ-இ]

# அண்மைக்காலத்தில் வெளிவந்தசிறந்தமுடிவுகள்

[கொழும்பு]

அண்மைக்காலத்தில் நடைபெற்ற ஜி சி ஈ [சாதாரண தர[ பரீட்சைகளில் கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி சி ஈ பரீட்சையிலேயே மாணவர்கள் அநேகர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்,

கொழும்பு விசாக்கா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 31 மாணவர்கள் 8 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்,

கொழும்பு றோயல் கல்லூரியில் 16 மாணவர்களும் சென் போல்ஸ் மிலாகிரிய மகாவித்தியாலயத்தில் 9 மாணவர்களும் நாலந்தாவில் 7 மாணவர்களும் மெதடிஸ்த கல்லூரியில் 5 மாணவர்களும் எட்டுப் பாடங்களில் அதிவிசேட சித்திபெற்றுள்ளனர், [ம-இ)

# டாக்டரின் வீடுடைத்து பொருட்கள் கொள்ளை
## வைமன் றேட்டில் சம்பவம்

[கொக்குவில்)

டாக்டர் ஒருவரின் வீடு உடைத்து சுமார் ரூபா 5000 பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று வைமன் றேட்டில் நடைபெற்றுள்ளது

இதுதொடர்பாக வேரின்ப நாயகம் பாலசுப்பிரமணியம் என்பவர் யாழ். பொலிசில் முறைப்பாடு செய்கையில் வீட்டின் சொந்தக்காரரான சிறீஸ்கந்தராசா என்பவர் சிலாபம் அரசினர் வயித்திய சாலையில் வேலை செய்கிறார் வீட்டின் பின்புறம் உள்ள காணியில் நான் வசித்து வருகின்றேன் அவ்வீட்டை நானே மேற்பார்வையிட்டு வருகின்றேன் சம்பவதினம் மாலை வீட்டைப்பூட்டி விட்டு நான் எனது வீட்டிற்குச் சென்று விட்டேன் மறுநாள் அவ்வீட்டிற்குச் சென்று பார்த்த போது வீடு உடைத்துப் பொருட்கள் திருடப்பட்டிருந்ததைத் தொடர்ந்து பொலிசில் புகார் செய்ததோடு சிலாபம் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் எனது மருமகனுக்கும் மகளுக்கும் அறிவித்தேன் என்று தெரிவித்தார்.

வீட்டின் சொந்தக்காரரான டாக்டர் சிறீஸ்கந்தராசா சாட்சியமளிக்கையில் தனது வீட்டில் இருந்த சுமார் ரூபா 5000 பெறுமதியான றேடியோ மின்சார உபகரணங்கள் இன்னும் பல பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக புலன் விசாரணையில் யாழ். குற்றத்தடுப்புப் பகுதிப் பொலிசைச் சேர்ந்த மாணிக்கவாசகர் இரத்தினபக்கா எஸ். ஜோர்ஜ் குணரெத்தினம் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

## ஆமை இறைச்சி வைத்திருந்தவருக்கு ரூ.500 அபராதம்!

[கொக்குவில்]

10 றாத்தல் ஆமை இறைச்சி வைத்திருந்தவருக்கு ரூபா500 அபராதம் விதிக்கப்பட்டது.

குருநகரைச்சேர்ந்த றேமன் என்பவர் 10 றாத்தல் ஆமை இறைச்சி வைத்திருந்ததாகக் குற்றச்சாட்டி குருநகர்பொலிசாரால் யாழ். நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டவழக்கில் யாழ் நீதிபதி விமல் திசநாயக்கா எதிரிக்கு ரூபா 500 அபராதம் விதித்தார்

## அமைச்சருடன் பேசினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க சமாஜத்தலைவர் திரு. ஜி. நல்லையா, செயலாளர் திரு கே. செல்லத்துரை, மட்டக்களப்பு சீவல் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. வடிவேலு செயலாளர் திரு சின்னராசா ஆகியோர் மட்டக்களப்பில் புயலால் பாதிக்கப்பட்ட சீவல் தொழிலாளரின் நிவாரணம் குறித்து, நிதிமந்திரி திரு. கே. டபிள்யு. தேவநாயகத்தை மட்டக்களப்புக்கச்சேரியில் சந்தித்து உரையாடினர் பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் அவர்கள் பார்வையிட்டனர். (அ)

## வாகனங்கள் சோதனை

[புலோலி]

வடபகுதியில் நடைபெற்று வரும் கொலை கொள்ளைச் சம்பவங்களை யடுத்து பொலீசாரும் இராணுவத்தினரும் கூட்டாகச் சேர்ந்து வாகனங்களை சோதனையிட்டு வருகின்றனர்.

முக்கிய இடங்களிலும் முக்கிய சந்திகளிலும் இச்சோதனைகள் பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [க)

## மாணவர்...

[1-ம பக்கத் தொடர்ச்சி]

கல்வி கற்றுக்கொண்டிருந்த சட்டக்கல்வி பயிலும 24 மாணவ, மாணவிகள் பொலிசாரின் உதவியுடன் கல்விநிலையத்தைவிட்டு வெளியேற்றப்பட்டனராம்.

இச்சம்பவம் நேற்று மாலை, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இடம்பெற்றது.

கல்விநிலைய நிர்வாகம், நூல் நிலையம் அமைப்பதற்கு திரட்டிய நிதி குறித்து எழுந்த விவகாரத்தினால இச்சம்பவம் இடம்பெற்றதாக அறியப்படுகிறது. சமபவம குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக யாழ்ப்பாண எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் உறுதியளித்ததைத் தொடர்ந்து மாணவர் கலைந்துசென்றனர். [கெ-இ]

## கைக்கடிகாரம் யாருடையது

பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்றை பரந்தன் இரசாயனக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திரு கே நாகமுத்து என்பவர் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் கண்டெடுத்து 'ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைத்திருக்கிறார். உரியவர் சரியான அடையாளம் கூறி பெற்றுக்கொள்ளலாம்


## விற்பனைக்கு

கொழும்புத்துறை துண்டி வீதியிலுள்ள இரண்டு பரப்பும் 8 குளியுமான காணி விற்பனைக்குண்டு நேரில் வரவும். விபரம்: 49, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 18 9

நல்ல நிலையிலுள்ள பியனோ (Broadway White) மற்றும் வீட்டுத்தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு டாக்டர் சி. சி கே செல்லத்துரை, 6, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1820

க. பொ. த. (உயர்தரம்) 1979

இலவச பயிற்சிக் கருத்தரங்கு

1979-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கான கருத்தரங்கு கலை-வர்த்தக பாடங்களில் இலவசமாக நடாத்தப்படவுள்ளது. 6-3-1979ல் கருத்தரங்கு ஆரம்பமாகும்.

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம்

148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1814


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389. Registered as a News Paper

Registered as a Newspaper at the General PostOffice in Sri Lanka.-